


அறைவு 02 இயம் 14 November 09-15, 2013

# மலைமுரசு
MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

வார இதழ்

விலை : 25.00 பக்கங்கள் : 16 Registered as a newspaper in Sri Lanka பிரதி சனிதோறும் வெளியாகும் வார இதழ்

# இசைப்பிரியாவின் கொலைக்கு விசாரணை தேவை



### விசாரணையின் மூலம் அரசின் மீதான குற்றச்சாட்டை நிராகரிக்கலாம் - சம்பந்தர்



சரணடைந்த பின்னர் கொடூரமான பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டதாகவும், அதன் பின்னரே சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் காணொளி மூலம் உலகெங்கும் பரப்பப்பட்டுள்ள இசைப்பிரியாவின் கொலைக்கு இலங்கை அரசாங்கம் உடனடி விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என தமிழ்த் தேசியக் 03

## கன்னியாவில் காணிக் கச்சேரி

கன்னியாவில் 42 கிராமங்களிற்குள்ளடங்கி, நில உறுதிப் பத்திரம் இன்றி வாழும் மக்களிற்குக் காணிகளை வழங்குவதற்கான ஆரம்பக் கட்டக் காணிக் கச்சேரி கன்னியா பாடசாலையில் நடைபெற்றுள்ளது... 03



## பாரதிபுரத்திற்கு உதவிகள்

பட்டினிச்சாவை எதிர்கொண்டிருந்த பாரதிபுரம் மக்களுக்கு உதவிகள் கிடைத்து வருகின்றன.

கடந்த வாரம் கிழக்கு மாகாண சபையின் எதிர்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினருமான தண்டாயுதபாணியின் தலைமையில் சென்ற குழுவினர் கனடிய மக்களின் உதவியென அக்கிராமத்தின் 138 குடும்பங்களிற்கு சுமார் ஆயிரம் ரூபா பெறுமதியான 03




க.பொ.த சாதாரண தரப்பரீட்சையின் பின்னர்
ஆங்கில கற்றை நெறி
க.பொ.த உயர்தர ஆங்கிலத்திற்கான தயார்படுத்தல்
Listening-Speaking-Reading-Writing
4 Months Courses
மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள் தரத்திற்கேற்ற வகுப்புக்கள்
வேல் வர்த்தகக் கல்லூரியுடன் இணையுங்கள்
இல. 159A, கடல்முக வீதி, திருகோணமலை. 0262227622, 077023201


# மட்டு பயிலுனர் 1000 பேருக்கு நிரந்தர நியமனம்

பட்டதாரிப் பயிலுனர்களாகக் கடமையாறிவரும் பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது. இவ் உறுதிமொழியைப் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் மட்டு நாடாளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசாவிடம் தெரிவித்துள்ளார்.

இப்பயிலுனர்களின் நிரந்தர நியமனம் உட்பட பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் அமைச்சரைத் தனிப்படக் கண்டு உரையாடியுள்ளார்.


மட்டக்களப்பில் நியமிக்கப்பட்ட 1938ப் பட்டதாரிப் பயிலுனர்களிற்கு தற்போதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. அத்துடன் அவர்களுள் 276 பேருக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் 03

## அடிப்படை வசதிகள் இன்றி நாவற்குடா சந்தை

(சச்சு)



மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட நாவற்குடாப் பகுதியில் அமைந்துள்ள இந்த சந்தைக் கட்டடத் தொகுதியானது எதுவித அடிப்படை வசதிகளுமின்றிக் காணப்படுகின்றது. அப் பகுதி வியாபாரிகள் தங்கள் பொருட்களை விற்பனை செய்து..... 03



## அரசியலை விடுத்து அபிவிருத்தியில் ஈடுபடுங்கள் - முதலமைச்சர் அன்புக் கட்டளை

அபிவிருத்தி நடவடிக்கைகளை தவிர வேறு அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது என முதலமைச்சர் விக்னேஸ்வரன் வடமாகாண சபை அமைச்சர்களிடம் அன்பாக கூறியதாக உள்ளகத் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

இந்த விடயத்தை உத்தரவாக அல்லாமல் அன்புக் கட்டளையாக கூறியதோடு இனப்பிரச்சினை குறித்த விடயங்களை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சித் தலைவர்களும் கையாள்வார்கள் என்றும் விக்னேஸ்வரன் கூறியுள்ளார். 03

## குறும்பட, இசை காணொளி வெளியீடு

மட்டக்களப்பின் இளம் படைப்பாளிகளால் உருவாக்கப்பட்ட குறும்படங்கள் மற்றும் இசைக் காணொளி வெளியிட்டு விழா எதிர்வரும் 10ம் திகதி காலை 10 மணிக்கு மட்டு [illegible]ரில்... 03




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042 fax: 026 2223071

## வணக்கம்

### பொதுநல (வா) ஆயம்

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாயத் தலைவர்களின் மாநாட்டில் கலந்து கொள்வதா? இல்லையா? அல்லது கலந்து கொள்வது சரியா? பிழையா? என்ற வாதப்பிரதி வாதங்கள் உலகெங்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பொதுநலவாயம் என்பதே பொதுமக்களின் நலனை முன்னிறுத்திப் பாடுபட வேண்டும் என்ற கருத்தை கொண்டமைந்துள்ளதை நாம் காணலாம். பொது மக்கள் என்பவர்கள் யார்? என்பதை எவராலும் சரியாக வரையறுக்க முடியாமல் போயுள்ளது.

எப்படி அமெரிக்கா அங்கீகரித்தால் அவர்களைச் சுதந்திரப் போராளிகள் என்றும் அமெரிக்கா எதிர்த்தால் அவர்களை பயங்கரவாதிகள் என்றும் உலகு ஒத்துக்கொள்கின்றதோ... அதே போல பொது மக்கள் யார் என்பதை இன்னமும் அமெரிக்கா பொதுநலவாயத்தில் தீர்மானிக்கவில்லை.

அதனால் ஈழத் தமிழர்கள் பொது மக்களா? என்பதை யாரும் வரையறுக்காததால் எமது நலனை முன்னிறுத்த இந்த ஆயம் தேவையில்லை போலத்தான் தெரிகின்றது.

என்று உலகலாவிய அடிப்படையில் ஈழத்தமிழர்கள் வலுக்கொண்ட குரலாக உருவாகின்றார்களோ அன்று தான் பொதுநலவாயம் எமது நலனை முன்னிறுத்தும் என்பது அடிப்படையில் உண்மைதான்.

உலகலாவிய அடிப்படையில் வலுக்கொண்ட குரலாக ஈழத்தமிழர்கள் உருவாக வேண்டுமாயின் ஈழத் தமிழர்களின் பொருளாதாரம் வலுக்கொண்டமைய வேண்டும். உலகின் அச்சாகவுள்ள மூலதனத்தினைக் கையாளும் அளவிற்கு எமது பொருளாதாரம் வளர வேண்டும்.

அவ்விலக்கை அடைவதை நோக்கமாகக் கொண்ட கல்வி எமதினத்திடையே பரவவேண்டும். மூலதனத்தைக் கையாளும் அறிவு என்பது முதலீட்டுடன் சம்பந்தப்பட்டது ன்னபதை ப் பலரும் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை. இன்றும் "சின்னதாக கோர்னமேந்தில் (கவர்ன்மென்ட் -Government) கோழி மேய்க்கும் வேலை கிடைத்தாலே" போதும் என்ற எமதெண்ணத்தில் மாற்றம் வரவில்லை என்பதைக் காண முடிகின்றது.

முதலீட்டு முயற்சிகளும், மூலதன உருவாக்கமும் எமது இனத்தினை பொதுமக்கள் எனும் தரநிலையை விட பெருந்தர நிலைக்குக் கொண்டு சென்றுவிடும்.

அன்று எமது குரலைக் கேட்கும் உலகில்... மாநாட்டுக்கு யார் போவது என்பதை அவர்கள் அல்ல..... நாம்தான் தீர்மானிப்போம்.. அதுவரை பொதுநலவாயத்தின் பார்வையாளர்களாக நாம்.... யாரும் வரலாம்...வராமலும் விடலாம்.... .

# பொதுநலவாயத்தைப் புறக்கணியுங்கள்



**- டெஸ்மன் டுட்டு -**

இலங்கைத் தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்க பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளை புறக்கணிக்க வேண்டுமென தென் ஆபிரிக்காவின் பேராயரும், நோபள் சமாதான விருது வென்றருமான வணக்கத்திற்குரிய டெஸ்மன் டுட்டு ஆண்டகை தெரிவித்துள்ளார். சிறுபான்மை தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட யுத்தக் குற்றச் செயல்களுக்கு நியாயம் வழங்க, பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளை பயன்படுத்திக கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கு அழுத்தங்களை பிரயோகிக்கும் ஓர் சந்தர்ப்பமாக இதனைப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கை அரசாங்கம் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை என்பது தெளிவாக புலப்பட்டால் உலக சமூகம் அழுத்தங்களை பிரயோகிப்பதில் தவறில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

புது டெல்லியில் வைத்து ஊடகவியலாளர்களைச் சந்தித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# பொதுநலவாயத்தில் கலந்து கொள்ளுங்கள்

**- இந்தியாவிற்கு ஆசிய மனித உரிமைச் சபை -**

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளில் பங்கேற்குமாறு ஆசிய மனித உரிமை ஆணைக்குழு கோரியுள்ளது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பிரதமர் கேள்வி எழுப்ப வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

யுத்தக் குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்கப்படாத நிலைமை நீடித்து வருவதாகத் தெரிவித்துள்ளது.

இந்த நிமைமயை சீர் செய்வதற்கு இந்திய பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஆசிய மனித உரிமை ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்பட்டால் மட்டுமே நாட்டில் நிரந்தர நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட முடியம் என தெரிவித்துள்ளது.

## கிழக்குப் பல்கலைலக்கழகத்திற்கு விடுமுறை

பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு கிழக்குப் பல்கலைக்கழகம் 11ம் திகதி முதல் மூடப்படவுள்ளது. பின்னர் 17ம் திகதியே பல்கலைக்கழகம் திறக்கும் என பதிவாளர் அறிவித்துள்ளார்.

## தொழில் முயற்சியாளருக்குப் பிரத்தியேக வங்கிக் கிளை மக்கள் வங்கி அறிவிப்பு

சிறிய மற்றும் நடுத்தரத் தொழிற் முயற்சியாளர்களின் நன்மை கருதி மட்டக்களப்பில் விசேட வங்கிக் கிளையொன்றை மக்கள் வங்கி திறந்துள்ளது. இக்கிளையில் இலகுவாகக் கடன்களைப் பெறலாம்.

CHOGM 2013 Sri Lanka

## 4 மணிநேரத்திற்கு 50 மில்லியன்

பொதுநலவாய மாநாட்டினை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வுகள் 15ம் திகதி நெலும் பொக்குன அரங்கில் நிகழவுள்ளது. இந்நிகழ்ச்சி நடைபெறும் நான்கு மணி நேரங்களுக்குமான செலவு ரூபா 50 மில்லியன் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மன்மோகனை அழைக்கின்றார் மன்னார் ஆயர்



எதிர்வரும் 15ம் திகதி ஆரம்பமாகவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளில் இந்திய பிரதமர் பங்கேற்க வேண்டும் எனவும், வட மாகாணத்திற்கு விஜயம் செய்ய வேண்டுமெனவும் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை அழைப்பு விடுத்துள்ளார். ந்திய பிரதமர் வட மாகாணத்திற்கு விஜயம் செய்தால், யுத்தத்தின் பாதிப்புக்களை புரிந்து கொள்ள முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தத்தின் போது என்ன நேர்ந்தது என்பது பலருக்கு தெரியும் எனவும் அவ்வாறான ஓர் சூழ்நிலையில் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வு நடைபெறுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளை புரிந்து கொண்டு அது தொடர்பில் தமது நிலைப்பாட்டை வெளியிட வேண்டிய பாரிய பொறுப்பும் கடமையும் இந்திய பிரதமருக்கு காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார். காணாமல் போதல்கள் இடம்பெறவில்லை, மனித உரிமை மீறல்கள் இடம்பெறவில்லை என அரசாங்கம் தொடர்ச்சியாக மறுத்து வருகின்ற போதிலும் உலகம் உண்மையை அறியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வின் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிட்டுமா என்பது சந்தேகமே என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்க அமைச்சர்கள் அதிகாரிகள் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு வருவதாகவும் மக்களுக்கு சேவையாற்றுவதில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். [illegible] சேவையாற்றுவார்கள் என மக்கள் திடமான நம்பிக்கை[illegible]ள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## அழகை ரசித்தவருக்கு ஆயிரக் கணக்கில் அபராதம்

முச்சக்கர வண்டிகளில் பயணம் செய்யும் பெண்களின் அழகை ரசிக்கக் கூடிய வகையில் கண்ணாடிகளைப் பொருத்தியிருந்த இரு ஆட்டோ சாரதிகளை பலாங்கொடை காவல்துறை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியுள்ளனர்.

தம் முச்சக்கர வண்டிகளில் மிக சூட்சுமமாக கண்ணாடிகளைப் பொருத்தியிருந்ததாகவும், சாரதிகளின் பாதுகாப்பற்ற ஓட்டுதலால் அதிகளவில் வபத்துக்கள் ஏற்படுவதாகவும் அத்துடன் பெண்களின் கௌரவம் பாதிக்கப் படுவதாகவும் காவல்துறையினர் குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

தண்டனையாக பலாங்கொடை நீதிமன்ற நீதவான் லலித் கன்னங்கர அவர்கள் தலா ரூபா 12000 வீதம் அபராதம் விதித்தார்.

## சுகாதாரத்துறையினர் தொழிற்சங்க நடவடிக்கைக்கு முடிவு

சுகாதாரத்துறையின் 15ற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் கடமைப் பகிஸ்கரிப்பை மேற்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

எதிர்வரும் 27ம் 28ம் திகதிகளிலேயே இந் நடவடிக்கையில் ஈடுபடும் முடிவை அவர்கள் அறிவித்துள்ளனர்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பல கொடுப்பனவுப் படிகளை தற்போது வரை சுகாதார அமைச்சு கவனத்திற்கொள்ளாதிருப்பதாலேயே நாடளாவிய ரீதியில் பகிஸ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

## சூதாட்ட விடுதிகளை பரிசோதித்த காவலர்களுக்கு - இடமாற்றம் -

சூதாட்ட விடுதிகளைப் பரிசோதித்து அங்க முறைகேடான நடவடிக்கையில் ஈடுபட்டடிருந்த 45 பேரைக் கைது செய்த காவல்துறையின் சிறப்புப்பிரவைச் சேர்ந்த 23 காவல்துறையினருக்கும் உடனடி இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்விடமாற்றம் தொடர்பாக கருத்தறிவித்த காவல்துறைப் பேச்சாளர் இக் காவல்துறையினர் நீண்டகாலமாக அச் சிறப்புப் பிரிவில் கடமையாற்றியதாலேயே இடமாற்றப் பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

## சேட்டுப் பொத்தானைப் போடாதவருக்கு 3மாதக் கடூழியச் சிறை

நீதிமன்றத்தை அவமதித்த நபருக்கு மூன்று மாத கால கடூழிய சிறைத்தண்டனையும் 1500 ரூபா தண்டப் பணமும் கல்முனை நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.யூட்சனினால் விதிக்கப் பட்டுள்ளது.

சாய்ந்தமருது பிரதேசத்தை சேர்ந்த இளைஞர் ஒருவருக்கே இத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. வாகன அனுமதிப்பத்திரமின்றி வாகனத்தை செலுத்திய குற்றத்திற்காக நீதிமன்றத்தில் ஆஜராகினார்.

இதன்போது குறித்த நபர் அணிந்திருந்த சேட்டுப் பொத்தான் திறந்து காணப்பட்டுள்ளது. இதனை அவதானித்த சிறைச்சாலை பாதுகாப்பு உத்தியோகத்தர் அதனை பூட்டுமாறு கூறிய போது அவர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

இதனாலே சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசைப்பிரியாவின் ...

கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இக் கொலை தொடர்பான உண்மையைக் கண்டறியும் முகமாக நியாயமான விசாரணைகளை இலங்கை அரசு மேற்கொள்வதன் மூலம் உண்மை வெளித் தெரிவதுடன் இலங்கை அரசின் மீது பூசப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கு விடையளிக்கக் கூடியதாகவும் இருக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கை அரசு இக் கொலை தொடர்பாக திரையிடப்பட்டுள்ள காயொளியின் மீதும் பரீட்சிப்புக்களை மேற்கொண்டு அதன் எண்மைத் தன்மை தொடர்பாக அறிக்கையிடுவதும் இக் குற்றச் சாட்டிலிருந்து விடுபடத் தேவையானது எனத் தெரிவித்துள்ளார்.

## கல்முனையில் இருந்து...

இதேவேளை. குறித்த பிரதிக் கல்வி பணிப்பாளரின் சகோதரர் களான ஏ.எல்.எம்.ஹம்ஸா மற்றும் ஏ.எல்.எம்.நசீர் ஆகிய இருவரும் கல்முனை ஸாஹிரா கல்லூரி யிலிருந்து முறையே கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரி மற்றும் சாய்ந்தமருது மல்ஹரு ஸம்ஸ் வித்தியாலயம் ஆகியவற்றுக்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.

குறித்த ஏழு அம்சக் கோரிக்கைகள் கல்முனை பிரதேச அரசியல்வாதிகளிடம் கல்முனை ஸாஹிரா கல்லூரி நிர்வாகத்தினால் கையளிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பான கூட்டமொன்றில் கல்முனை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் தலைமையில் இடம்பெற்ற சந்திப்பில் மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல். வலய கல்வி பணிப்பாளர் ஹாசீம். கல்முனை காவல்நிலையப் பொறுப்பதிகாரி கப்பார் மற்றும் ஸாஹிரா கல்லூரியின் பிரதி அதிபர் ஹம்சா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் இந்த பிரச்சினை தொடர்பில் பொய் முறைப்பாடுகள் எதனையும் கல்முனை காவல் நிலையத்தில் பதிவு செய்வதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டது.

## பாரதிபுரத்திற்கு.....

பொருட்களை வழங்கியிருந்தனர்.

அதற்குப் பின் இரு நாட்களின் பின்னர் அங்கு சென்ற பிரதேசத்திற்குப் பொறுப்பான இராணுவப் படையணியினர் பிரிகேட் கொமாண்டர் பிக்கும் தலைமையில் 38 விதவைப் பெண்களுக்கு சுமார் 600 பெறுமதியான உலர் உணவுப் பொதிகளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அடுத்த வந்த சில நாட்களில் திருகோணமலை நகர சபைத் தலைவர் தி. செல்வராசா இரண்டு மூடை அரிசி மற்றும் ஒரு மூடை பருப்பை அவர்களுக்கு வழங்கியதாக தெரிகின்றது.

## மட்டு பயிலுனர்.....

மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதும் அவை இன்னமும் வழங்கப்படவில்லை.

இவ்விரு விடயங்களையும் முக்கியமாக அமைச்சருடன் கலந்துரையாடிய போது அந்த 276 பேருடன் மேலும் நூறு பேருக்கு நியமனக் கடிதங்கள் தயாராகி விட்டதாகவும், இம் மாத முடிவுக்குள் மொத்தமாக 400 பேருக்குக் கடிதங்கள் வினியோகிக்கப்பட்டுவிடும் எனவும் அமைச்சர் தெரிவித்ததாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார். அதற்கும் மேலதிகமாக 600 பேருக்கான நியமனக் கடிதங்கள் இவ்வருடத்தினுள் வழங்கப்படும் எனவும் அமைச்சர் உறுதியளித்தாக பொன். செல்வராசா தெரிவித்துள்ளார்.

## யானைகளுக்கு...

செயலாளர் ந.வில்வரெத்தினம் தெரிவித்துள்ளார்.

போரதீவுப் பிரதேசச் செயலகத்திற்குட்பட்ட கிராமங்களின் அடிக்கடி யானைகளால் மக்கள் அவதியுறுவதை அடுத்தே பிரதேசச் செயலர் இவ்வறிவித்தலை விடுத்துள்ளார்.

## விபத்தில் பெண்...

தம்பலகாமத்திலிருந்து திருகோணமலை நோக்கி இவர்கள் காலை வேளையில் முச்சக்கர வண்டியில் பயணித்திருந்தனர். தம்பலகாமம் கைத்தொழிற் பேட்டைக்கு முன்புறமாக முச்சக்கர வண்டி கட்டுப்பாட்டை இழந்ததை அடுத்து மின் கம்பமொன்றில் மோதியுள்ளது.

இவ் விபத்தில் கணவன் காயங்கள் எதுவுமின்றித் தப்பினாராயினும் முச்சக்கர வண்டியோட்டியும், ரிஸ்னாவும் படுகாயமடைந்த நிலையில் திருமலைப் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் . ஒரு மணி நேர மருத்துவ முயற்சி பலனளிக்காததால் ரிஸ்னா மரணமாகியுள்ளார். ஓட்டுனர் சிகிச்சை பெற்றுத் தேறி வருகின்றார்.

## கன்னியாவில்.....

நில உரிமைத் திட்டத்தின் கீழ் அரச காணிகளில் நீண்டகாலமாகக் குடியிருந்து காணிகளை அபிவிருத்தி செய்த பயனாளிகளுக்கு காணி உரிமைக்கான ஆவணங்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே இக் காணிக் கச்சேரி நடைபெற்றதாகப் பிரதேசச் செயலாளர் தெரிவித்தார்.

இத் திட்டத்தின் முதற்கட்டமாக கன்னியா. பீலியடி, மற்றும் மாங்காவித்து ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களின் தகமைகளைப் பரிசீலிப்பதாகவே இக்காணிக்கச்சேரி நடைபெறுவதாக பிரதேசச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

## அடிப்படை வசதிகள்....

கொள்வதற்கேற்ற வசதிகளின்றி பெரும்சிரமப்படுகின்றனர். இதன் காரணமாக அனேகமான வியாபாரிகளினதும் மக்களினதும் வருகை அரிதாகவே காணப்படுகின்றது. இதனால் அப்பகுதி மக்கள் ஆரையம்பதி அல்லது மட்டக்களப்புச் சந்தைக்கு செல்ல வேண்டிய நிலையாகவுள்ளது. தங்கள்பகுதி சந்தையைபுனரமைத்தால் இங்கு தங்கள் தேவையைப் பூர்த்திசெய்து கொள்ள முடியும் என மக்கள் மலைமுரசிற்குத் தெரிவித்தனர் நம்புகின்றனர். இதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தங்கள் மேலான கவனத்தை செலுத்தி இக்கட்டடத்தினை அபிவிருத்தி செய்து தருவார்களா? என அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## கிண்ணியா.....

நகர பிதா டாக்டர் ஹில்மி மஹ்ரூபினால் நடப்பட்டது.

எனினும் இந்த விருந்தினர் விடுதி கிண்ணியா முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு மிக அருகில் அமையவுள்ளதால் மாணவிகளின் கலாசாரத்திற்கு பாதிப்பாகும் என பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கிழக்கு மாகாண முதலமைச்சரிடம் மேற்கொண்ட முறைப்பாட்டை அடுத்தே இவ்வுல்லாச விடுதியின் கட்டுமானத்தை நிறுத்துமாறு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

## அரசியலை விடுத்து...

இக்கருத்துத் தொடர்பாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனிடம் கேட்டபோது தமிழத்தேசியம் பேசி மக்களிடம் வாக்குப் பெற்ற மாகாண சபை உறுப்பினர்கள் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக எப்படி பேசாமல் இருக்க முடியும் என கேள்வி எழுப்பினார்.

மாகாண சபை இனப்பிரச்சினைக்கு தீர்வு அல்ல. மக்கள் தேர்தலில் வாக்களித்தது மாகாண சபைக்கும் அல்ல அபிவிருத்திக்கும் அல்ல. இறுதிப் பேரில் இடம்பெற்ற இனப் படுகொலைகளுக்கு எதிராகவே மக்கள் வாக்களித்தனர்.

அபிவிருத்திக்கு என்றால் மக்கள் அமைச்சர் டக்கள்ஸ் தேவானந்தாவுக்கும் அமைச்சர் றிஷாட் பதியுதீனுக்கும் வாக்களித்திருப்பர் ஆகவே முதலமைச்சர் விக்னேஸவரன் இதனை கருத்தில் எடுக்க வேண்டும் என்றும் தமிழத்தேசிய கூட்டமைப்பின் தலைமை இது தொடர்பாக விளக்கமளிக்க வேண்டும் எனவும் சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

## குறும்பட, இசை...

நடைபெறவுள்ளதாக இளம் கலைஞர்கள் தெரிவித்துள்ளனர். அந்நிகழ்வில் அவர்களால் இயக்கப்பட்ட நான்கு குறும்படங்களும், இரண்டு காணொளியுடன் கூடிய பாடல் தட்டுக்களும் வெளியிடப்படவுள்ளன.

## குச்சவெளி மீனவர்...

இவ் இளைஞன் நேற்று (04) எலக்கண்டிய கலப்பில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கஹவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பெ?லிஸார் தெரிவித்தனர்.

சடலம் மீதான பிரேத பரிசோதனைகள் இன்று (05) திருகோணமலை பொது வைத்தியசாலையில் இடம்பெற்றது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குச்சவெளி பொலிஸார் மேற்கெண்டுள்ளனர்

## - மட்டக்களப்பில் தனிநாயகம் அடிகளின் விழா -

மட்டக்களப்பில் தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா 09ம் திகதி தொடக்கம் நினைவு கூறப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்ட நூற்றாண்டு விழாச் சபைத் தலைவர் பேராசிரியர் மௌனகுருவின் தலைமையில் நடைபெறுகின்றது.

(சச்சு)





## வில்லூன்றிக் கந்தனின் சூரசங்காரம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்மோகன்சிங் வடபுலத்திற்கு வர அருகதை உள்ளவரா?

மன்மோகன் சிங் தலைமையிலான காங்கிரஸ் அரசாங்கம் 2008 இல் வன்னிப் பகுதியில் மோதல்களுக்கு மத்தியில் 350,000 க்கும் மேற்பட்ட மக்கள் சிக்கி இருக்கிறார்கள் என்பது தெரிந்திருந்தும் 70,000 பேருக்குத்தேவையான உணவு மற்றும் மருந்துப்பொருள்கள் மட்டுமே அங்கே அனுப்பப்படுகிறது.

என்று நன்கு அறிந்திருந்தும் பட்டினிச்சாவுடன் தமிழ் இனப் படுகொலைஇடம்பெற்றபோது மௌனமாக இருந்தது. மட்டுமன்றி இலங்கை அரசுக்கு பெருமளவு ஆயுதங்களையும் ஆலோசனைகளையும் யுத்தம் நடத்துவதற்குத் தேவையான பொருளாதார உதவிகளையும் வழங்கியது. இத்தகைய ஆதரவு வழங்கிய பின்பும் இலங்கைஇராணுவம் போரில் வெல்ல முடியாமல் திணறிக் கொண்டு இருந்த போது இரகசியமாக இந்திய இராணுவத்தையும் இறக்கி தமிழின அழிப்பிற்குத் தோள் கொடுத்தது.

போரின் போக்கில் திருப்பத்தை ஏற்படுத்த விடுதலைப்புலிகளின் தலைமைத் தளபதிகளும் மிகச்சிறந்த போராளிகளும் (Cream of The Tigers as mentioned by DBS Jeyaraj in his controversial column: Theepan: A Heroic Saga of a Northern Warrior) தங்கள் முழுப் பலத்தையும் திரட்டி நாடத்திய வீரம்செறிந்த ஆனந்தபுரம் சமர் நயவஞ்சகமான இரசாயன ஆயுதப் பிரயோகத்தால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

இந்தியாவின் உத்தரவுக்கமைய இங்கு தடைசெய்யப்பட்ட இராசயன ஆயுதம் பாவிக்கப்பட்டது என்பதற்கும் இறுதிப் போரில் பாவிக்கப்பட்ட இராசாயன ஆயுதத்தை இலங்கைக்கு வழங்கி உதவியது இந்தியாவின் மன்மோகன் தலைமையிலான [illegible] சாட்சியங்கள் உண்டு. பன்னாட்டு சுயாதீன விசாரணை நடத்தப்பட்டால் இந்த உண்மைகள் நிச்சயம் வெளிவரும். இன்றும் இலங்கை இராணுவ உயர் பீடத்தில் சாட்சி சொல்லக் கூடியவர்கள் இருக்கிறார்கள்.முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மட்டுமல்ல வடமாகாண ஆளுநரின் வலது கரமாகச் செயற்படும் மேஜர் சுனத் ஜெயக்கொடியும் ஆனந்தபுரம் சண்டையில் படைகளுக்கு ஏற்பட்ட பேரிழப்புக் குறித்தும் யுத்தம் நிறுத்தப்படாவிடில் படைகளுக்கப் அழிவு ஏற்படும்என்பதையும்நன்கு அறிந்திருந்தனர். இந்நிலையில் இந்தியாவின் ஆலோசனைக்கமைய படையினர் பின்வாங்கப்பட்டு இரசாயனஆயுதம் பிரயோக்கிக்கப்பட்டு போரின் போக்கு மாற்றப்பட்டது.

இந்திய காங்கிரஸ் அரசின் நேரடி பங்களிப்பைப் பகிரங்கப் படுத்தியிருந்தனர்.

இந்த சரணடைதல் என்ற நாடகத்தில் சதீஸ் நம்பியார், விஜய் நம்பியார் மற்றும் பான்கி மூன் எப்படி இந்தியாவின் ஆளும் காங்கிரசின் விருப்பினை பூர்த்தி செய்தனர் என்பதற்கு மனித உரிமைகள் செயற்பாட்டாளர்போல்நியூமன் (Paul Newman)கடந்தஆண்டுஐ.நாமனித உரிமை பேரவையில்ஆற்றிய உரையும் சான்று பகரும்:(http://www. colombotelegraph. com/index.php/justice-not-mourning-or-doles-is-what-the-victims-want/) போரின் போது பெருமளவு பொதுமக்கள் வேண்டுமென்றேஇலக்கு வைக்கப்பட்டு கொல்லப்பட்டதையும்வைத்தியசாலைகள் இலக்கு வைக்கப்பட்டு மீண்டும் மீண்டும் பல தடவைகள் தாக்கப்பட்டதையும் களத்தில் நின்ற ஐ.நா பணியாளர்களும் செஞ்சிலுவைத் தொண்டர்களும் மருத்துவர்களும் உறுதிப்படுத்திய போதும் ஐ.நா R2P ( Protect to Responsibility ) ஐ பிரயோகிக்காமல் கடமை தவறியதற்கு சதீஸ் நம்பியார், விஜய் நம்பியார் பான்கிமூன் கூட்டே காரணமாகும்.

2009 மே 18 இல் நேரடி யுத்தம் தமிழின அழிப்புடன் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து கனடா தலைமையில்மேற்கு நாடுகள் சில ஜெனீவா மனிதஉரிமைகள் பேரவையில் இலங்கையில்இடம்பெற்றஇனப்படுகொலையைக் கண்டிக்கும் தீர்மானம் கொண்டு வந்த [illegible] தீவிரபிரசாரத்தை முன்னேடுத்து அந்தத் தீர்மானத்தைதோற்கடித்ததுடன்இலங்கை பயங்கரவாதத்தைஅழித்ததைப்பாராட்டும் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் பின்னணியில்இருந்தது.'விக்னேஸ்வரன்' யாழ்ப்பாணத்திற்கு வாருங்கள் என்று செங்கம்பளம் விரிக்கும் மன்மோகன் சிங்தலைமைவகிக்கும்காங்கிரஸ்அரசே. இந்தியாவின் இந்த இலங்கையை ஆதரிக்கும்தீர்மானத்தின்காரணமாகவே 250,000 க்கும் மேற்பட்ட தமிழர்கள் அடிப்படைவசதிகள் அற்ற முகாம்களில் பலவந்தமாக அடைபட்டுக் கிடந்த போதும் நள்ளிரவில் இம் முகாம்களில் கேட்பாரின்றி ஆட்கடத்தல்கள் இடம் பெற்றபோதும்,இளம்பெண்கள் கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவுகள் இடம் பெற்ற போதும்மனிதாபிமானத்தில் கரிசனை கொண்ட உலக நாடுகளால் காய்களாகஉருட்டி வருவதை சம்பூரில் இருந்து தமிழ் மக்களைப் பலவந்தமாக வெளியேற்றிய போதும் அவர்களுக்கு எந்தநிவாரணமும்வழங்காமல் இந்தியா தனது சுயநலத்தை முன்னிலைப் படுத்தியதன் மூலமாகவும் அறிந்து கொள்ளலாம்.

இலங்கையில் இறந்த இந்திய இராணுவத்துக்குநினைவுச்சின்னம் அமைப்பதில்தீவிரமாகஇருந்தகாங்கிரஸ் அரசாங்கம் இன்று வரைக்கும் இந்திய இராணுவத்தினால்கொல்லப்பட்டஆயிரக் கணக்கான பொது மக்களுக்காகவோ பாலியல்வன்புணர்வுக் குள்ளாக்கப்பட்ட பெண்களுக்காகவோ வருத்தப்பட்டுக் கவலைதெரிவிக்க வில்லை. காங்கிரஸ் அரசுஅமைதிப்படைஎன்றபோர்வையில் தன்னால் இழைக்கப்பட்ட போர்க் குற்றத்திற்காகஇலங்கைத் தமிழர்களிடம் இன்றுவரை மன்னிப்புக் கூட கேட்டதில்லை என்பதையும் இந்த நேரத்தில் தமிழ்ச் சமூகம் நினைவில் கொள்ள வேண்டும்.

புலிகள் இருக்கும் காலத்தில் அவர்களின்மீதுகொண்ட வெறுப்பினால் தான் காங்கிரஸ் அரசாங்கம் ஈழத் தமிழர்களுக்கு உதவத் தயங்குவதாக சில அரசியல் பண்டிதர்களும் புலிகளுக்கு எதிரானவர்களும் எழுதியும் கூறியும் வந்தார்கள். இறுதி யுத்தம் முடிந்து 4 வருடங்கள் கடந்த பின்பும் காங்கிரஸ் அரசு ஈழத் தமிழர்களுக்கு உரிமைகளைப் பெற்றுக் கொள்ள சிறிதளவாவது உதவி செய்ததா ? இன்று வரைக்கும் தமிழர்களுக்கு சர்வதேச அமைப்புகளின் ஊடாக கிடைக்கக் கூடிய உரிமைகளையும் ஆதரவையும் தடுக்குநிறுத்திக் கொண்டு துவிச்சக்கரவண்டி வழங்கல், வீட்டுத் திட்டம் போன்ற மலிவான ஏமாற்று வேலைகளைச்செய்துஈழத் தமிழர்களை தொடர்ந்தும்ஏமாற்றலாம்என்று எண்ணுகிறதுஇந்தியஅரசு.

ஆனால் 'கெடுவான் கேடு நினைப்பான்' என்பது போல காங்கிரஸ் அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை இலங்கையிலும்படுதோல்வி அடைந்ததற்குஆதாரமாக நெடுந்தீவில் இருந்து அம்பாந்தோட்டை வரைக்கும் இந்தியாவின்வடபகுதியினுள் நுழையத் துடிக்கும்சீனாஉளவுபார்ப்பதற்குதேவையான துறைமுகம், செய்திப் பரிமாற்ற கோபுரம் போன்றவற்றுடன் தென்திசையிலும்பிரசன்னமாகி இருப்பதைக் குறிப்பிடலாம். இது போதாது என்று

அன்னையை இழந்தது போல கறுப்புக் கொடி கட்டி சோக கீதம் இசைத்த போது வெளிப்பட்டது என்பதையும் இங்கே நினைவில் கொள்ள வேண்டும். ஆனால் இன்று கமலேஸ்சர்மா கூறுவது போல் வடமாகாண மக்களுடன் இந்தியா இணைந்து நிற்கும் என்று கூறுவதன் பின்னணி தான் என்ன? சடுதியாகத்தமிழரில் கரிசனை கொண்டு மன்மோகன்சிங் யாழ்ப்பாணத்துக்கு வருவதன் நோக்கம் தான் என்ன? 2014 பொதுத் தேர்தலில் காங்கிரஸ் தோற்பதுசுயாதீன ஆய்வுகள்மூலம் உறுதிப் படுத்தப்பட்ட நிலையிலும் தற்போது காங்கிரஸ் அரசாங்கம் மக்கள்ஆதரவைஇழந்து சேடம் இழுத்துக் கொண்டு இருக்கும் நிலையிலும் தமிழ் நாட்டில் வாக்கு வங்கியை மீண்டும் பலப்படுத்துவதற்குத் தான் இந்த இறுதிக் கட்ட கபட நாடகம்.இந்த நேரத்தில் மன்மோன் சிங்கை அழைக்கும் விக்னேஸ்வரன் மற்றும் சம்பந்தன் கூட்டணியின் தாற்பரியத்தையும் நாம் அலசிப் பார்க்க வேண்டியது அவசியம்.தென்ஆபிரிக்கா, கிழக்குத் தீமோர்உட்பட இன விடுதலை பெற்றநாடுகளில் பாதிக்கப் பட்ட இனத் தலைவர்கள் எந்த சந்தர்ப்பத்திலும் இனஅழிப்பு மற்றும் இனப்படு கொலைகளைவெளிப்படுத்தாமல் மறைத்து வைத்து உரிமைகளைப் பெற முயற்சிக்கவில்லைஇந்த நூற்றாண்டின் மிகப் பெரிய இன அழிப்பாக இறுதி 8மாதங்களில் 150,000க்கும் மேற்பட்ட தமிழர்கள் வன்னியில் கொல்லப்பட்டும் இன்று வரைக்கும் ஏன் சம்பந்தன் கூட்டணி எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இன அழிப்பு என்ற வார்த்தையை உச்சரிக்கவே இல்லை என்பது புரியாத புதிராகவே இருக்கிறதா? இது புதிரல்ல!யுத்தம் தீவிரமடைந்த போதே மாவை-சம்பந்தன் கூட்டணிக்கு காங்கிரஸ் அரசால்வழங்கப்பட்ட உறுதிமொழியின்படி சம்பந்தன் கூட்டணி இலங்கையில் தமிழினப் படுகொலை நடந்தது என்றோ அல்லது நடக்கிறது என்றோமறந்தும்சொல்லப்போவதில்லை. ஏனெனில் இந்தியாவை மீறி அல்லது இந்தியாவைப்பாதிக்கும்எந்த வார்த்தையையும் மாவை - சம்பந்தன் கூட்டு இனிமேலும்உச்சரிக்கப் போவதில்லை.

இது தேசியப்பட்டியல்எம்பி சுமந்திரனுக்கும்நன்கு தெரியும் என்பது மட்டுமல்லஉடன்பாடான விடயமும்கூட. அண்மையில்உச்சநீதிமன்றத் தீர்ப்பையும்மீறி வலிகாமம் பகுதியில் வீடுகள்

# தமிழினப் படுகொலையின் உண்மைக் குற்றவாளிகள் யார்?

வெள்ளைக் கொடி வழக்கில் சரத் பொன்சேகா, 'Gota ordered to Kill them' என்று சண்டே லீடர் ஆசிரியர் பெட்ரிக்கா ஜோன்ஸிற்கு தான் முன்பு வழங்கிய பேட்டியின் போது கூறியதையே தானும் போர்க் குற்றவாளி யாக்கப்படுவேன் என்பதை உணர்ந்ததால் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பின்பு நீதிமன்றில் மறுத்துரைத்தவர்.சரணடைந்தவர்களைக் கொல்லுமாறு இந்தியா வழங்கிய உத்தரவையே இலங்கைப் படையினர் செய்து முடித்தனர்.

இசைப்பிரியா போன்ற ஊடகவியலாளர்களுக்கும் மற்றும் தமிழ்ப் பெண்களுக்கும் இழைக்கப்பட்ட மன்னிக்க முடியாத குற்றத்தில் நேரடியாகவே மன்மோகன் தலைமையிலான காங்கிரஸ் அரசின் கைகறைபட்டுள்ளது. இதற்கு இலங்கை சனாதிபதி மகிந்த ராஜபக்கஷவும் மற்றும் அவரது சகோதரரும் பாதுகாப்புச் செயலருமான கோட்டாபாய ராஜபக்சவும் 'நாம் இந்தியாவின் யுத்தத்தையே செய்து முடித்தோம்' என்று வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கூறியதை மேற்கோள்காட்டி சருவ்தேச ஆய்வாளர்கள் சிலர், சரணடைந்த பொதுமக்களையும் போராளிகளையும் கொல்லுமாறு உத்தரவு வழங்கி தமிழின அழிப்பில் தலையீடுசெய்ய முடியாமற் போனது. அதன் பின்பு 2012 பங்குனியில் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் அமெரிக்காதலைமையில்இலங்கையின் மனித உரிமை நிலைமைகளைஐக்கிய நாடுகள் நேரடியாகக் கண்காணிக்கக் கூடிய பொறிமுறையை ஏற்படுத்தக் கூடிய தீர்மானத்தைக் கொண்டு வந்த வேளை மீண்டும் தீர்மானத்தை நேரடியாகவே எதிர்த்து இலங்கையின் இறை யாண்மையைப் பாதிக்கும் எந்தத் தீர்மானத்தையும் ஆதரிக்க மாட்டோம் என்று கூறி அதை பிசுபிசுக்கச் செய்தவரே இந்த மன்மோகன் சிங் தான். இன்று வரை தமிழர்களுக்கு எதிராக இடம்பெறும் இனப் படுகொலை, போர்க் குற்றம், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் பாரிய மனித உரிமை மீறல்கள் காரணமாக சர்வதேச மட்டத்தில் மகிந்த தலைமையிலான இலங்கை அரசு கடும் சவாலை எதிர் கொள்ளும் நிலையில் இலங்கையை முண்டுகொடுத்துக் காப்பாற்றி வரும் முக்கியமானவேலையைசெய்துவருவதே மன்மோகன்சிங்தலைமையிலானகாங்கிரஸ் அரசாங்கமே.

அதேவேளை இத்தகைய உதவிகளுக்கு தமிழ் [illegible]

ஒரு சிறிய நாடாகிய இலங்கையின் தூதுவர் இந்தியா பொதுநலவாய மகாநாட்டில் கலந்துகொள்ளாவிட்டால் சருவதேச அளவில் தனிமைப் படுத்தப் படும் என்றும் இந்தியாவுடன் வர்த்தக ஒப்பந்தங்களை முறித்துக் கொள்வோம் என்றும்மிரட்டும் அளவுக்கு மன்மோகன் சிங்கின் காங்கிரஸ் அரசாங்கத்தின் செயற்பாடுகளும்வெளியுறவுக் கொள்கையும் இந்தியாவை பலவீனப் படுத்தி உள்ளது.உண்மையில் மன்மோகன்சிங் தமிழரின் ஆதரவைப் பெறவேண்டுமானால் இழந்த இந்தியாவின் கௌரவத்தைமீளப்பெற வேண்டுமானால் யாழ்ப்பாணத்துக்கு வராமலே அதைஇலகுவாக தமிழருக்கு சம உரிமை வழங்கும் திட்டம் ஒன்றுக்கு இலங்கையை வலியுறுத்தி இணங்க வைப்பதன் மூலமாக செய்திருக்க முடியும். மேலும் அன்னை இந்திரா காந்தி இலங்கையின் வட பகுதிக்கு விஜயம் செய்யாமலே தமிழ் இன அழிப்பில் இருந்து தமிழர்களைக் காக்க எடுத்த நேர்மையான நடவடிக்கைகள் காரணமாகதமிழர்களின்பெரு மதிப்பைப் பெற்றிருந்தார். அது அன்னையின்அகாலஇழப்பின்போதுபல்லாயிரக் [illegible]களுக்கு அப்பால் இருந்த தமிழ் மக்கள் தமது சொந்த

அழிக்கப்படும்போதுதமிழர்களின்வாழ்வாதாரத்தைஅழித்துஇனஅழிப்பில் ஈடுபடும் சிங்களத்தின்உண்மையான வடிவத்தை வெளிப்படுத்தாமல் அதை உள்நாட்டு விவகாரம் என்று பூசி மெழுகுவது எதற்காக?திட்டமிட்டமுறையில் தமிழ்ப் பகுதிகளில் கரு அழிப்பு இடம்பெறும் போதுஅதைப் பற்றிமூச்சுவிடாமல் இருப்பதுஎதற்காகஅல்லதுயாருக்காக? இவற்றின்பின்னணிஎப்படி இருந்தாலும் விக்னேஸ்வரன் மன்மோகன் சிங்கை யாழ்ப்பாணம்வருகை தருமாறு விடுத்த அழைப்புதமிழருக்கு எந்தவித உரிமைகளையும் பெற்றுத் தரப்போவதில்லை. மாறாகதமிழ்நாட்டுசட்டசபைத் தீர்மானத்தையும் மீறி மன்மோகன் சிங் இலங்கைவந்துபொதுநலவாயமகாநாட்டில் கலந்து கொள்வதற்குஒரு வழியை ஏற்படுத்தித்தந்துள்ளது என்பது தான் 'சம்பந்தன் முன்மொழிந்த வடமாகாண முதலைமைச்சர்விக்னேஸ்வரன்.மன்மோகன் சிங்கையாழ்ப்பாணத்திற்குஅழைத்தகயமை வெளிப்படுத்துகிறது. இது மகிந்த-மன்மோகன்-சம்பந்தன்கூட்டணியின் வெளித்தெரியாதஇராசதந்திரம்.தமிழினம் அழியும்நெருப்பில்குளிர்காயும்பதவிஅரசியல் ரோம்எரியும்போதுபிடில்வாசித்ததற்குஒப்பாகும்

**யாதவன் நந்தகுமாரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடைதிறந்த வெள்ளமாக 'மடை'

## கிராமியக் கலைப் பெருவிழா

எங்களது இன்றைய வாழ்கைச் சூழல் பாரம்பரிய சடங்கு, நிகழ்த்தி தகவல்களை தேவையற்றவைகளாகவும் பொருத்தமற்றவைகளாவும் பேசுகின்றன.

இத்தகைய பார்வைகளை உருவாக்குபவைகளாக தொழில் உற்பத்தியினை மையப்படுத்திய கல்வி முறைமை, பொருளாதார முறைமை செயற்படுகின்றன. இவை மனிதரை சூழல் சார்ந்த அறிவற்றவராகவும் தங்கி வாழ்பவராகவும் மாற்றுகின்றன.

இத்தகைய நிலை மனிதர்களின் சுயமான வாழ்தலை இருப்பினை குலைக்கின்றது. ஒரு சாரார் உற்பத்தி செய்யவும் ஏனையவர்கள் நுகரக் கூடிவர்களாகவுமுள்ள சமூகமைப்பு உருவாக்கப்படுகின்றது.

இங்கு மனிதர்களின்



வாழ்வியல் தேவைகளை தீமானிப்பவைகளாக முதலாளிய தொழில் நிறுவனங்கள் செயற்படுகின்றன. எமது சூழலில் ஏற்படும் பருவ மாற்றங்களுக்குரிய சடங்குகள் அதனோடு இணைந்த உணவு முறைகள், மக்களின் கலை வெளிப்படுத்தல்கள் போன்றவற்றை உள்ளடக்கிய வாழ்தல் முறை இக் காலத்திற்கு தேவை அற்றதாய் மாற்றப்படுவதன் ஊடாக ஐரோப்பிய பண்பாட்டுடன் இணைந்த வாழ்க்கை முறைகள் நாகரீமானவைகளாக பரவலாக்கப்படுகின்றன. இச் சூழலில் எங்களின் சுயமான வாழ்தலைதக்க வைக்க வழக்காறுகளை முன்னெடுப்பதுஅவசியமாகிறது. ஆனால் பாரம்பரிய ஆற்றுகைகள்,சடங்குகள் சாதியம், பால்நிலை ஏற்றத்தாழ்வுகளைகொண்ட உயர் ஆண் நிலைசார்ந்த வெளிகளாக இயங்கி வருகின்றன. இவற்றினை முழுச்சமூகத்திற்குமானதாக முன்னெடுப்பது சிக்கலானதாகிறது.



இத்தகைய சிக்கல்களை உரையாடலுக்கு கொண்டுவரவும் பல் வகையான ஆற்றுகைகளை சமூக வெளியில் அறிமுகம் செய்வதாகவும் அவற்றின் அவசியத்தினை பாடசாலை மாணவர்கள், சமூகங்கள், என அனைவருக்கும் உணரச்செய்வதாகவும் பாரம்பரிய கலைவிழா அமைந்தது.

அத்தோடு அண்ணாவிமார்களின் கலைஞர்களின் பல் ஆளுமைத்திறனை தனித்தன்மைகளை பொது வெளிக்கு கொண்டு வந்ததோடு பலபிரதேசம் சார்ந்த கலைஞர்க ளுக்கி டையிலான தொடர்பை யும்அவர்க ளுக்கிடையிலான உரையாடலையும் ஏற்படுத்தியந்தது. நிகழ்வுகள் கலைஞர்களின் ஆற்றுகைகள், உரையாடல்களாக நடைபெற்றன. இவ் உரையாடல்கள்கலைஞர்களுக்கிடையிலும், மாணவர்களுக்கிடையிலும், கலைஞர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் பாரம்பரிய கலை தொடர்பான ஆவலர்களுக் கிடையிலும் இடம்பெற்றன. ஆற்றுகைகள் மாலை 5.00 மணியிலிருந்து இரவு 11.00 மணி வரை இடம்பெற்றன். அவை தபோவனமைதானத்திலும் உட்துறைமுக வீதியிலுள்ள இந்துசமயக் கலாசார மண்டப வளாகத்திலும், நகரக் கடற்கரையிலும் இடம்பெற்றன. இவை மக்களிடையே சிறந்த தொடர்பாடலை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட பேராசிரியர் நஜ்முதீன் அவர்கள் மூன்று நாட்கள் நிகழ்வுகளில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கியதுடன் உரை யாடல்களில் காத்திரமான கருத்துக் களையும் வழங்கிருந்தார். இந் நிகழ்வு இருநூறுற்கும் மேற்ப்பட்ட கலைஞர்களையும், பாடசாலை மாணவர்களையும் பொது மக்களையும் பல்தன்மை கொண்ட பார்வையாளர் களையும் ஒரு வெளிக்குள் கொண்டு வந்ததோடு அவர்களுக்கிடையிலான உரையாடல் களையும் ஏற்படுத்தியிருந்தது. தபோவனம், நகர் கடற்கரை,உட்துறைமுக வீதியிலுள்ள மைதானம் போன்றவற்றில் நிகழத்தப்பட்ட கலைகளுக்கு மக்களிடையே கிடைத்த வரவேற்பும் குறிப்பிடத்தக்கது.

கலைஞர்கள் சுயமாக தங்கள் கருத்துக்களை முன்வைத்ததுடன் மதம், சமூகம் கடந்த மனித உறவினை ஒவ்வொருவர்களுக்கிடையேயும் ஏற்படுத்தியிருந்ததனையும் அவதானிக்க முடிந்தது. இது பாரம்பரிய கலைகளின் அவசியத்தினையும் உணர்த்தியது.

**கி. கலைமகள்**

முற்றும்..........

## எத்தனை காலம் தான்......?

"அக்கரைகள் பச்சை இல்லை" எனும் முதுமொழியை நாம் அறிந்திருந்தாலும் மனதில் ஏற்படும் ஒரு வகையான அவாவை பூர்த்தி செய்வதற்காக அதை ஏற்றுக்கொள்ளாது நடந்து கொள்வதன் மூலம் பல கஷ்டங்களை எதிர் நோக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

அந்தப் பிரதேசத்தில் அது ஒரு பெரிய வியாபார நிலையம். அங்கு எல்லாப் பொருட்களையும் மலிவான விலையிலும் நியாயமான விலையிலும் பெற்றுக் கொள்ள முடியும். மலிகை சாமான்கள், மரக்கறிவகைகள், வீட்டுப் பாவனை பொருட்கள், சிற்றுண்டிகள், மிளகாய், அரிசி, அரைக்கும்மில், இவ்வாறு பல பிரிவுகளைக் கொண்டதே அந்த வியாபார நிலையம்.

அதன் உரிமையாளர் ஏற்கனவே வெளிநாடு சென்று கைநிறைய சம்பாதித்து வந்தபின் தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் தேவையானவைகளை பூர்த்தி செய்துள்ளதால் அவரின் வெளிநாட்டு நோக்கம் முற்றாக நிறைவேறியுள்ளது.

தற்பொழுது அவரின் சகோதரர்களை வெளிநாடு அனுப்பிவிட்டு அவர் "சிவனே" என கல்லாப்பட்டறையில் அமர்ந்து விட்டார். இனிமேல் வெளிநாடு சென்று சம்பாதிக்க வேண்டிய அவசியம் அவரிடம் அறவே இல்லை.

அந்தப் பகுதியிலுள்ள கடைகள் மத்தியில் அவரின் கடைக்கும் தனி மவுசு இருந்து வந்தது. காரணம் வியாபாரத்தில் மிக நேர்மையாக நடப்பது மாத்திரமல்ல தன்னை நாடிவரும் வாடிக்கையாளர்களின் மனது புண்படும் விதத்தில் நடந்து கொள்ள மாட்டார். அவரின் கடையில் எக்கச்சக்கமானோர் கடனுக்கு சாமான்கள் வேண்டுவார்கள். மாதக் கடைசியில்தான் கொடுக்கல் வாங்கல்களை முடித்துக் கொள்வார்கள்.

அங்கு ஒரு சிலரே கொடுக்கல் வாங்களில் நேர்மையை கடைப்பிடிக்க தவறுவார்கள். இருப்பினும் அவர், அவ்விதமானவர்களை என்றுமே புறக்கனித்து நடந்து கொள்ளமாட்டார். வியாபாரத்தில் நண்பர்களை அதிகமாக சேர்த்துக் கொள்ளும் தொழிநுட்பத்தை அவரின் தந்தையிடம் இருந்து அவர் கற்றுக் கொண்டுள்ளதால் அவரின் வியாபார நிலையம் இன்னும் சிறப்பாக இயங்கிவருபதற்கு முக்கிய காரணமாகும்.

"யானையின் பலம் தும்பிக் கையில் மனிதனின் பலம் நம்பிக்கையில்" என்று பெரியவர்கள் தெரியாமலோ சொல்லி வைத்திருக்கிறார்கள்? "நம்பிக்கை தான் வாழ்க்கை" என்பதை அந்த கடை உரிமையாளர் என்றுமே மறந்து விடுவதில்லை. மிக சூசமாக வாடிக்கையாளர்களை தனது கைக்குள் போட்டு வியாபாரத்தை சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதில் அந்தப் பகுதியில் அவருக்கு நிகர் அவரே.

ஆனாலும் அவரின் மனைவி அவரைப் போன்றவரல்ல "வெட்டு ஒன்று துண்டு இரண்டு" அதுதான் அவரின் போக்கு கடன் வசூலிப்பதே உரிமையாளர் அவருக்கு வழங்கியுள்ள நிரந்தர நியமனம் ஓரிரு மாதங்களுக்குள் கிடைக்க வேண்டிய பாக்கித் தொகை கிடைக்கா விட்டால் நேரடியாகவே கடன் தர வேண்டியவர்களின் படலைக்கே சென்று விடுவார் அவரின் மனைவி.

இனி கேட்கவா வேண்டும்? ஏமாற்ற வேண்டு மென்று நினைப்பவர்கள் கூட உடனடியாக தங்கள் கபட நோக்கத்தை கைவிட்டு எப்படியும் அவரிடம் கடனை செலுத்தி விடுவார்கள். "வியாபாரத்தில் அப்படியொருவர் இல்லா விட்டால் உரிமையாளரின் தலையில் வாடிக்கையாளர்கள் அனைவரும் சேர்ந்து மிளகாய் அரைத்து விடுவார்கள்" என்று ஊரார் பேசிக்கொள்வார்கள்.

அவரின் பலகீனத்தை அறிந்து பலர் பலசாலிகளாகி அங்கு அராஜகத்தை நிலைநாட்டவும் தவறவில்லை. ஆனாலும் உரிமையாளர் சகஜமாக எவருடன் பழக கூடியவர் என்பதால் அவரை ஏமாற்றலாம் என சிலர் நினைக்கவும் வாய்புண்டு அல்லவா? அவரின் மனைவி கடன் வசூலிக்க செல்வது சிகப்பு நிற உந்துருளியில். அதன் சத்தம் கேட்டாலே கடன் காரார்களுக்கு ஒரே நடுக்கம். அவர் பார்வைக்கு மிகவும் சாந்தமானவர் ஆனால் கோபத்தில் வாயை திறந்தால் கொட்டும் வார்த்தைகளின் வேகம் தேசிய நீர்வழங்கள் சபையின் நீர் குழாயை விட மிக வேகமாக இருக்கும்.

மேலும் உரிமையார் மிகவும் புத்திசாலி. காலம் அறிந்து காயை நகர்த்தக் கூடியவர். சகலபொருட்களையும் ஒரே இடத்தில் பெறக்கூடிய வகையில் அவர் வியாபாரத்தை நடாத்திச் செல்வதால் எப்பொழுதும் அக்கடை வாடிக்கையாளர்களால் நிரம்பி வழிந்து கொண்டே இருக்கும்.

ஒரு தடவை சுகாதார பரிசோதகர்கள் அவரின் தேனீர் கடையை பரிசோதனை செய்து விட்டு அங்கு ஒரு முறைப்பாட்டு பெட்டியொன்றை வைக்கும் படி அறிவுறுத்தல் கொடுத்து விட்டு சென்றார்.

ஓரிரு மாதங்களுக்குப் பின் குறித்த பரிசோதகர்கள் அங்கு வந்து வழமையான சோதனையை நடாத்திவிட்டு முறைப்பாட்டு பெட்டியை திறந்து பார்த்தனர். அங்கே எந்த விதி முறைப்பாடுகளையும் காணக்கிடக்கவில்லை ஆனால் ஒரு சிறு கடதாசித் துண்டில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது.

"ஐயா இந்த முதலாளி மிக நல்லவர், ஆனால் நாங்கள் சாப்பிட்டபின் காசு கேட்கிறார்" இது தமாஷாக எழுதப்பட்டதென பரிசோதகர்கள் புரிந்து கொண்டு சென்றுவிட்டனர்.

மேலும் ஒரு வாடிக்கையாளர் நீண்ட காலமாக குறித்த கடையில் கடனுக்கு சாமான்களை பெற்றுவந்தார். அவர் ஓர் அரசாங்க ஊழியர் என்பதால் சம்பளம் அன்றே எடுத்த கடையில் முக்கால்வாசியை செலுத்திவிடுவார் மிகுதி கால்வாசியை அடுத்துவரும் மாதங்களில் செலுத்திவருவார். எப்படியும் நிலுவை இருந்து கொண்டே வரும்.

**...நாட்டு நடப்பு...**

உரிமையாளர் அதை பொருட்படுத்துவதே இல்லை அவர் போன்று இன்னும் எத்தனையோ மாதம் சம்பளம் பெறுகிறார்கள் அவ்வாறே நடந்து வருவார்கள். எப்படியும் மாதா மாதம் உரிமையாளருக்கு பணம் கிடைத்துக் கொண்டே வரும். இன்றைய வாழ்க்கை செலவைப் பற்றி உரிமையாளர் அறியதரவில்லை அவரும் பல பெரிய நிறுவனங்களிலிருந்து கடனுக்கு சமான்களைப் பெற்று சிறிது சிறிதாகவே காசோலை மூலம் நிலுவைகளை சீர்செய்து வருவார்.

அந்த பெரிய வியாபார நிலையத்தின் நிரந்தர வாடிக்கையாளர். ஒருவரை தனது புதிய கடைப்பக்கம் ஈர்க்க இன்னும் மொரு கடைக்காரர் அவருக்கு தூண்டில் போடும் தனது வாடிக்கையாளராக எப்படியோ மாற்றிவிட்டார்.

ஆனால் அவர் முன்னர் கடனுக்கு சமான் எடுத்த அந்த பெரிய வியாபார நிலைய உரிமையாளர் அவரின் அந்த நடவடிக்கையை பொருட்படுத்தாது இருந்ததுடன் அவர் மேல் கோபமும் கொள்ளவில்லை. ஏனென்றால் அவர் உண்மையில் அப் பகுதியில் நல்லதொரு வியாபாரியாருக்கும் இல்லை என்று கூறாமல் பார்த்தும் பாராமலும் உதவக் கூடியவர்.

ஒரு மாதங்களுக்குப் பின் கடையை மாற்றிக் கொண்ட அந்த வாடிக்கையாளர் பழைய கடைக்காரரிடம் வந்து தனக்கு நேர்ந்ததை கூறினார். அதாவது அவர் அந்தக்கடையில் சமான்கள் வேண்டிய வேலையில் ஒரு மாதம் செலுத்த வேண்டிய தொகைக்கும் புதிய கடையில் தற்போது செலுத்த வேண்டிய தொகைக்கும் பாரிய வித்தியாசம் இருந்தது.

பழைய கடைக்காரர் அவருக்கும் உதவும் வகையில் அவரின் கணக்கு புத்தகத்தை வேண்டிப் பார்த்துவிட்டு தனக்குள்ளே சிரித்துக்கொண்டார். நடந்தது இதுதான் வாடிக்கையாளர் மாதா மாதம் செலுத்தாமல் விடும் நிலுவைப் பணங்களுக்கு வட்டியும் சேர்க்கப்பட்டிருந்தது. குறித்த புதிய கடைக்காரர் வழமையாக வட்டிக்கு பணம் கொடுப்பவர் தனது சொந்த தொழிலை மேம்படுத்தவே ஒரு கடையை திறந்து கடனுக்கு சாமான்களை கொடுத்து விடுபடும் நிலுவைக்கு வட்டியையும் சேகரித்து வந்தார். அது அவரின் தொழிலின் தொழிநுட்பம் என்ற பழைய கடை உரிமையாளர் மனதிற்குள் நினைத்துக்கு கொண்டார் பாதிக்கப்பட்டவர் மீண்டும் தன்னை அக்கடையில் வாடிக்கையாளராக சேர்த்துக் கொள்ளும்படி விடுத்த கோரிக்கையை பழைய முதலாளி நிரந்தரமாக நிராகரித்து விட்டார்.

- துட்டகைமுனு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

## நிதி நிறுவனங்கள்.



கலாபூஷணம்
வீ.என்.சந்திரகாந்தி

திருமலை வீ.என்.சந்திரகாந்தி சீட்டுக்கார சித்தார்த்தன், திருமலையில் பலசரக்கு கடை நகைக்கடை புடவைக் கடை ஈறாக பல வர்த்தக முயற்சிகளிலும் முதலீடு செய்து வியாபாரம் புரிகின்ற அனைவராலுமே அறியப்பட்ட ஒருவர் ஆவார்.ஒரு கடையை புதிதாக தொடங்கவேண்டுமா? நடந்து கொண்டிருக்கும் வியாபாரத்தை பெருக்க வேண்டுமா?நட்டமடைந்துகொண்டிருக்கும் ஒரு தொழிலை மேலதிக முதலீடு செய்து நிமிர்த்தவேண்டுமா? சித்தார்த்தனை நாடினால் சரி நியாயமான வட்டிக்குபொறுப்பு இல்லாமல் கடன் கொடுப்பதற்கு அவரை விட்டால் ஆள் இல்லை.

அப்படி ஒருவர் இருந்தபடியால் தான் வேலைவெட்டி இல்லாமல் சும்மா இருந்த பலரும் அவரிடம் கடன் பெற்று தொழில் செய்து பெரும் முதலாளிமார்களாக வளர்ச்சியடைந்ததோடு அல்லாமல் திருமலை நகர் வர்த்தகத்தில் பெரும் இடத்தையும் பிடிக்க முடிந்தது. சின்னக்கடை மத்திய வீதியில் அவருக்கு சில கடைக் கட்டடங்களும் இருந்தன.

ஒழுங்கானவர் களாக பார்த்து கண்டு பிடித்து நீ அதில் ஒருதொழிலைச் செய் என்று ஊக்குவிப்பார்.திருமலை மத்திய வீதியில் பலசரக்கு கடைகள் நிறைந்து காணப்பட்டன. வடகரை வீதி நகைக்கடைகளுக்கும் புடவைமாளிகைகளுக்கும் பிரசித்தமாக இருந்தது. பிரதான வீதி இரும்புக்கடைகள், எலக்ரோனிக் வியாபார தலங்கள் உட்பட பலவகை வியாபார நிலையங்களால் நிரம்பியிருந்தது.தவிர திருஞானசம்பந்தர் வீதி மூதூர் கிண்ணியா பகுதிகளில் இருந்து வரும் மரக்கறி பழ வகைகள் தயிர் என்று ஒரு பெரும் அங்காடியாக இருந்தது.

குறுக்கு தெருக்கள் பல உட்பட கடல்முக வீதி நகரத்தை மேலும் பெரும் வர்த்தக மையமாக திகழச்செய்து கொண்டிருந்தன.அந் நாட்களில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி என்று ஒரு சில அரச வங்கிகளே இயங்கிக்கொண்டிருந்தன. இலங்கை காப்புறுதிக்கூட்டுதபானம் தனி ஒரு காப்புறுதி நிறுவனமாக இருந்தது. சித்தார்த்தன் என்ற தனி மனிதன் இவை எல்லாவற்றையும் முடக்கிவைத்து விட்டு மக்கள் பலத்தை தன்பக்கம் வைத்தபடி வர்த்தகத்தில் பெரும் சாதனை புரிந்தான் என்று தான் கூறவேண்டும்.வங்கிகளில் சேமிப்பு கணக்கு வைப்பதற்கே எவரும் முன்வரவில்லை.

நிலையான வைப்புக்கள், தங்ககடன்,வைபற்றியெல்லாம் மக்கள் அறிந்திருக்கவில்லை.ஆனால் சீட்டுப் பற்றி அவர்கள் அறிந்திருந்தார்கள். அதுவும் சித்தார்த்தனுடன் சீட்டுக் கட்டாதவர் எவரும் ஒரு முதலாளி என்றே கருதப்படமுடியாத அளவிற்கு சீட்டு பிரபல்யம் அடைந்திருந்தது.சீட்டு பிடிப்பதை அரசு தடைசெய்திருக்கின்றது. அப்பாவி மக்கள் ஏமாற்றப்படுவதை தடுப்பதற்காக என்று கூறப்படுகின்றது. ஆனால் சித்தார்த்தனிடம் நம்பகத்தன்மை இருந்தது!வியாபாரிகள் மட்டுமன்றி பொதுமக்களும்சீட்டில் பங்குபற்றினார்கள்.

கேள்விச்சீட்டுக்கள் பெரும் முதலீட்டுக்கு வழியமைத்து கொடுத்தது. மக்களுக்கு சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்தியது. அதனால் குடும்பங்கள் காணி வாங்கி மனை கட்டி சிறப்புடன் வாழ்ந்தார்கள். பிள்ளைகள் கல்வி கற்றனர். குமர்பிள்ளைகள் கரைசேர்ந்தனர்.ஒரு தாச்சியாக இருந்து சீட்டுக்கள் முறிவடைந்து விடாமல் பாதுகாப்பதற்குஅவரது நம்பகத்தன்மை மட்டும் போதாது. பல்வேறுபட்ட மக்களை இனம்கண்டு சீட்டில் இணைத்துக்கொள்ள வேண்டும். கேள்வியை உயர்த்தி முன்கூட்டியே ஒருவர் சீட்டை எடுக்க முற்பட்டால் பொறுப்பு வைத்தே பணத்தை கொடுக்கவேண்டும்.அவற்றை விட வாய்ச்சாதுர்யம் மிக மிக அவசியம். அந்த வகையில் சித்தார்த்தனுக்கு அந்த திறமைகள் நன்கு கைகூடியிருந்தன. எந்த 'திறிக்கீஸ்'காரனிடமும் இலாவகமாக கட்டுக்காசினை அறவிட அவரால் முடிந்தது.



அதனாலேயேபெரும்தொகையிலான சீட்டுக்கள் முறிவடைந்து விடாமல் கடந்த 30வருடங்களாகநடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.சித்தார்த்தன் பல குடும்பங்களை வாழவைத்தார். அவருடையபிள்ளைகளில் இரு பெண்கள் மணம் முடித்து வெளிநாடு சென்று விட்டார்கள். மகன் ஒருவர் உள்ளூரிலேயே வியாபார நிலையம் ஒன்றை நடாத்திக்கொண்டு ஓரளவு வசதியுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

அப்படி பெரும் சாதனைகள் புரிந்த படிக்காத மேதை சித்தார்தன் தன் பிள்ளைகளுக்கு சொத்துக்களை பிரித்து கொடுத்து விட்டு வங்கி மூலம் சிறு வருமானத்திற்கும் வழிசெய்து விட்டு அந்த வட்டியை எடுத்து தனது செலவுகளை சமாளித்துக்கொண்டு தாச்சி என்ற ஸ்தானத்தில் இருந்து இன்று ஓய்வு பெற்றுவிட்டார்.யாரைத்தான் வயோதிபம் விட்டது!அவரது ஓய்வும் நாட்டு நிலைமை சீரடைந்தமையும் ஓரே சமயத்தில் நிகழ்ந்தன.

திடீரென திருமலையை வங்கியல்லா நிதி நிறுவனங்கள் நிறைத்தன. பல காப்புறுதி நிறுவனங்கள் முளைவிட்டன. தனியார் வங்கிகளும் போட்டி போட்டன. 'லீசிங் கம்பனிகள்' மக்களுக்கு பெரும் பணத்தினை இறைத்தன. அதேபோல் பெரும் வட்டியையும் அறவிட்டன.விளம்பரங்கள் பெருகின எங்கு பார்தாலும் பனர்ஸ் ஹங்கேர்ஸ்! மக்கள் 'லீசிங்' முறையில் ஆட்டோ, லொறி, ட்ரக்ரர் லான்ட்மாஸ்டர், என்று கொள்வனவு செய்தார்கள்.

வெவ்வேறு வியாபார முயற்சிகளுக்கு கடன் பெற்றார்கள். எல்லாமே பெரும் வட்டியில் இருந்ததால் மாத கட்டுப் பணத்தை ஒழுங்காக செலுத்த மிகுந்த சிரமப்பட்டார்கள்.ஒப்பந்தப்படி நடவடிக்கை எடுக்கப்படுகையில் அவர்கள் பெரும் பாதிப்பிற்கு உள்ளானார்கள்.நிலையான வைப்புக்களுக்கு வங்கி வழங்கும் வட்டி குறைவாக இருந்தது. வங்கியல்லா நிதி நிறுவனங்கள். கவர்ச்சியான வட்டி வீதங்களை வழங்கமுன்வந்தன. அப்படியான நிறுவனங்களில் நிலையான வைப்புக்களை மக்கள் செய்தார்கள்.

சித்தார்த்தன் தனது வங்கியிருப்பில் அரைப்பங்கினை மீளப்பெற்று திருமலையில் பழமை வாய்ந்த ஒரு நிதி நிறுவனத்தில் நிலையான வைப்பில் இட்டார்.வங்கியல்லா நிதி நிறுவனங்கள் இரண்டு வகைப்படும். ஒன்று மத்திய வங்கியின் கீழ்பதிவுசெய்யப்பட்டிருக்கும். மற்றையது மத்தியவங்கியின் அங்கீகாரத்தை பெற்றிருக்காது.மத்திய வங்கி தமக்கு கீழ் பதிவு செய்த வங்கிகள் மற்றும் வங்கில்லா நிதி நிறுவனங்களின் பட்டியலை பத்திரி கைகளில் பிரசுரித்திருந்தது. சித்தார்த்தன் பணத்தைநிலையான வைப்பில் இட்ட நிறுவனமானது மத்திய வங்கியில் பதிவுசெய்யப்பட்டிருந்தது. அவர்களும் ஒழுங்காக மாத வட்டியை செலுத்திக் கொண்டிருந்தார்கள்.

இந் நிலையில் அவரது மூத்த மகள் கொழும்பில் தனது நண்பி பங்கு தாரராக இருக்கும் ஒரு நிதி நிறுவனம் அதிக வட்டியை வழங்குவதாகவும் அதில் முதலிடு செய்யும் பணத்திற்கு நண்பியே பொறுப்பு வகிப்பாள் என்றும் தொலைபேசி மூலம் அறிவித்திருந்தாள். அந்த வேண்டுகோளையும் மறுக்க முடியாமல் சித்தார்த்தன் வங்கியில் இருந்த மீதிப்பணத்தை மீளபெற்று அந்நிறுவனத்தில் நிலையான வைப்பில் இட்டார். அந் நிறுவனம் மத்திய வங்கியில் பதிவு செய்யப்படவில்லை. சித்தார்தன் பணத்தின் மேல் படுத்திருந்ததை தான் அவர்களது பிள்ளைகள் அறிந்திருந்தார்கள்.

அவருக்கு பணக்கிடக்கும் இருக்கும் என்று அவர்கள் எண்ணவில்லை.அதனால் அவருக்கு வெளி நாட்டில் வசிக்கும் பிள்ளைகளிடம் இருந்து தொலைபேசி அழைப்புக்கள் வருவது அபூர்வமாக இருந்தது. பொதுவாகவே இலங்கையில் உள்ள உறவினர் நண்பர்களுடன் தொலைபேசியில் கதைத்தால் அவர்கள் தமது கஷ்டங்களை கூறி பண உதவி கேட்பார்கள் என்று ஒரு அபிப்பிராயம் இருப்பதால் சித்தார்தனின் மகள்மார் இருவரும் உறவினர்களுக்கே தொலைபேசி அழைப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதில்லை.

சித்தார்தனின் தேகநிலை குன்றிக்கொண்டு போனது. நிதி நிறுவனங்களிடம் இருந்து வரும் வட்டி போதவில்லை. மருந்து செலவு உயர்ந்து கொண்டு போனது. இந்நிலையில் திருமலையில் உள்ள நிதி நிறுவனம் ஒன்று அவருக்கு அழைப்பு விடுத்திருந்தது.நிலையான வைப்பில் உள்ள மக்களின் பணத்தினை பிரயோகித்து தமது நிறுவனத்தின் பங்குகளை தாம் தமது வாடிக்கையாளர்களுக்குவழங்கும் சந்தர்ப்பம் ஒன்று வந்துள்ள தாகவும் முகப்புபெறுமதிக்கே தாம் தமது பங்குகளை வழங்க தயாராக இருப்பதாகவும் சந்தை நிலவரத்தில் தமது பங்கு அப்போ இரட்டை பெறுமதியாக இருப்பதாகவும் கவர்ச்சி வார்த்தைகளை அள்ளிவீசினார்கள்.

நல்ல இலாபத்துடன் இயங்கும் நிறுவனத்தின் முகப்பு பெறுமதியை விட சந்தை பெறுமதி அதிக மடங்காக இருக்கும். அவற்றை கொள்வனவு செய்வதென்றாலும் அப்பெறுமதியை செலுத்தினால் தான் இயலும்.ஆனால் அந் நிறுவனம் தாமே முகப்பு பெறுமதிக்கு பங்குகளை வழங்க முன்வந்தமை பல வாடிக்கையாளர்கள் மத்தியல் வரவேற்பை பெற்றது. பல டாக்டர்கள் மில்லியன் ரூபாவுக்கு பங்குகளை வாங்கினார்கள். மேலும் அரச சார்பற்ற நிறுவனங்களில் உள்ளோர்.

வர்த்தகர்கள் அரச ஊழியர்கள் பொது மக்கள் என்று பலர் பங்குகளை வாங்கினார்கள். இவர்களை ஆதாரமாக காட்டி சித்தார்த்தனுக்கு தைரியம் ஊட்டப்பட்டது. சித்தார்த்தனும் மருண்டு விட்டார்.நிலையான வைப்பில் இருந்த பணம் நிறுவனத்தில் அவருக்கான பங்குகளாக மாறின!இந்நிலையில் கொழும்பில் சித்தார்த்தன் முதலீடு செய்த நிறுவனம்வட்டி அனுப்புவதை நிறுத்திவிட்டது. மகள் மூலம் நண்பியை தொடர்புகொண்ட போது அவள் இப்போ அந்நிறுவனத்தில் இல்லை என பதில் வந்தது. வட்டி அனுப்பப்படுவது நின்ற போதும் அந் நிறுவனத்தின் காரியாலயம் ஒன்று கொழும்பில் இயங்கிக் கொண்டிருந்தது. சித்தார்த்தன் அனுப்பும் கடிதங்களுக்கு பதில் ஏதும் வரவில்லை. சிரமத்தை பாராமல் நேரில் சென்றால் தான் ஏதாவது சாதிக்கமுடியும் என்று தீர்மானித்து சித்தார்தன் கொழும்பு சென்றார். அலுவலகத்தில் ஓரிரு பெண் ஊழியர்கள் தான் பதில் சொல்வதற்கு எஞ்சியிருந்தார்கள்.

தாம் வீடுகட்ட கட்டிடங்கள் நிர்மாணிக்க என்று பலருக்கும் கடனாக வழங்கிய பணத்திற்குரிய மாதாந்த கட்டுப்பணத்தையும் வட்டியையும் எவரும் செலுத்தாததால் தாம் வாடிக்கையாளர்களுக்கு வட்டி வழங்கவோ பணத்தை மீளளிப்பு செய்யவோமுடியாத நிலையில்



உள்ளதாக பதில் அளித்தனர். கவர்ச்சிகரமான வட்டி வீதத்தினால் மருண்டு நிலையான வைப்புக்களில் வைப்புசெய்யப்பட்ட மக்களின் பணம் அனைத்தினையும் நிறுவனத்தினை ஸ்தாபித்தவர்களே கடன் என்ற பெயரில் அபகரித்துவிட்டார்கள் என்பதை சித்தார்தன் பிறர் மூலம் அறிந்த போது அவரது இரத்த அழுத்தம் அதிகரித்தது. தலை சுற்றியது.

நடைபாதையில் தள்ளாடியபடி சென்றபோது தடக்கி விழுந்ததில் அவரது வலது கையின் பிரதான எலும்பு முறிவிற்குஉள்ளானது.சித்தார்த்தனின் ஆட்ட ஓட்டம் திருமலையிலேயே அடங்கிவிட்டது. நன்றாக மனம் குன்றி விட்டார். ஒழுங்காக கிளினிக் செல்லா விட்டால் தேகசுகத்தினை காப்பாற்ற முடியாத நிலையில் மத்திய வங்கியின் அங்கீகாரம் பெறாத ஒரு நிறுவனத்தில் பணத்தை முதலீடு செய்த தனது முட்டாள் தனத்தை எண்ணி எண்ணி விம்மினார்.

இந் நிலையில் திருமலையில் அவர் பங்குகளை வாங்கி முதலீடு செய்த பதிவுசெய்யப்பட்ட நிதி நிறுவனமும் மூன்று வருடங்களாகியும் பங்கு இலாபம் எதனையும் வழங்க வில்லை. அதை காட்டிலும் பரிதாபம் அந்த நிறுவனத்தின் பங்குகளின் சந்தைப்பெறுமதி முகப்பெறுமதியின் நான்கில் ஒன்றின் கீழ் வீழ்சியடைந்திருந்தது.நிலையான வைப்பின் மூலம் ஒழுங்காக மாத வட்டியை பெற்றுக்கொண்டிருந்த சித்தார்த்தனுக்கு பெரும் கவலையும் ஏமாற்றமுமாக போய்விட்டது.

நிறுவனத்தின் முகாமையாளரை அணுகி தனது பரிதாப நிலையை கூறி கண்ணீர் வடித்தார்.நிறுவனத்தின் சார்பில் பொது மக்களின் நிலையான வைப்பில் இருந்த பணத்தை பங்குகளில் முதலீடு செய்ய தூண்டுவதற்கு காரணமாக இருந்ததே அம் முகாமையாளரின் பசப்பு வார்த்தைகளே! திருக்கோணமலை மாவட்டத்திலேயே பொதுமக்களின் பல மில்லியன் ரூபாக்கள் பறிபோயிற்று. அவர்களில் சித்தார்த்தனும் ஒருவராகி விட்டார்.

அந்நிறுவனம் நட்டத்தில் ஓடுவதை அம்முகாமையாளர் நன்கு உணர்ந்திருந்தார். ஆனாலும் அவர் மக்களுக்கு பெரும் துரோகம் செய்தும் நிறுவனத்திற்கும் தனது பதவிக்கும் முண்டுகொடுப்பதையே தனது ஒரே நோக்கமாக கொண்டிருந்தார்!

மிகுதி அடுத்த வாரம்........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மானுட வதை

மகளே.......
பிறக்கும் போது யாருக்கும்
பிறப்பின் அருமை தெரிவதில்லை
நீ பிறந்த போதும் அப்படித்தான்.

நீ மட்டுமல்ல...
லும்பினியில் மாயாவின் மடியில்
சித்தார்த்தன் பிறந்தபோதும்
அவன் பிறப்பை
யாரும் உணரவில்லை....

மாட்டுத் தொழுவத்தில்
மரியாளின் மடியில்
உதித்தபோது...
ஏசுவையும் எவரும்
கண்டுகொள்ளவில்லை....

மக்காவில் நபிகள் பிறந்து
40 வயதாகும் வரை அவர் பெருமை
யாருக்கும் புரியவில்லை...

சரவணப் பொய்கையில்
தாமரைப் பூக்களாய் தோன்றிய போது
சூரனை வதம் செய்ய வந்தவன் என
முருகனை யாரும் நினைக்கவில்லை

அப்படித்தான்.....
நீ பிறந்தபோதும்
உலக மனசாட்சியை நீ
உலுப்புவாய் என்றோ
தமிழர்களின் வரலாறாய்
மாறுவாய் என்றோ
யாரும் நினைக்கவில்லை

ஒரு பெண்ணாக அல்ல
ஒரு தாயாக நான்
துடிக்கிறேன்.....

நீ வதைக்கப்பட்டு
சிதைக்கப்பட்டு நான்கு ஆண்டுகள்....
மன்னம்பேரி...
கோணேஸ்வரி...கிரிசாந்தி
வரிசையில் நீ

இப்போதும்
அவர்கள் சொல்கிறார்கள்
உன் மரணம் பொய்யென்று..

நெறி பிறழ்ந்த பிறவிகளின்
கைகளில் நீ
கசங்கினாய்....
குருதி குடிக்கும்
அவர்களின் பசி
இன்னமும் தீரவில்லை

இனிமையான இசையாய்

இதயங்களில் இறங்கிய உன்குரலை
உள்வாங்கினோம்...
நீ ...இறுதியாய்
அழைத்த குரல் இப்போது தான்
உலக முற்றத்தை வந்தடைகிறது....

தமிழனின் வலியை, வேதனையை...
வெளியே சொல்ல முடியாத
துயரங்களை
நீ ஒற்றை ஆளாகவே
உணர்த்தியுள்ளாய்...

மகளே.....
உனக்கு மட்டும் நேர்ந்த
அவலமல்ல இது...
உலகிலுள்ள ஒவ்வொரு
பெண்ணுக்கும்
இழைக்கப்பட்ட அநீதி...

இனத்தை மொழியை
மதத்தை கடந்து....
ஒரு மானுட வதை என்பது
உணரப்பட வேண்டும்...
நிச்சயமாக....
நிச்சயமாக......
மகளே .....
இது நிகழும்.

**ஆதிலட்சுமி**

**குளோபல் தமிழ்ச் செய்திகள்**

# ஈனக்குரல்

அலையிழந்து அடங்கியகடல்
ஆடையிழந்து கூடாகிய உடல்
நிலைகுலைந்து நின்றது நீயும்...

நீ அவளில்லை.
அவள் நீயில்லை.

எவளில்லை நீ?

எவளென்றாலும்
கறைபடிந்த உள்ளாடையுடன்
காத்திருப்பர்....

கூடு கலைந்து ஓடிய நாளில்
கைவிடப்பட உயிர்களிடம்
எஞ்சியிருந்தவற்றைக்
காவி வந்தவர்கள் எவருமில்லை

படிமங்கள் ஆயிரம்
புனைவுகள் கோடி
போரையும் வாழ்வையும்
சொல்ல முடிந்த கவிஞர்கள்
இங்கில்லை.

யாரையும் நோகாது செல்லக்
காற்றுக்கு முடியும்
கண்ணீருக்கு முடியாது.
பெண்ணே
நீ நின்ற கடல் சேறானது.
உன்னைக் கைவிட்ட
காலம் ஊனமானது.

செய்யாதன செய்த அவன்
அரியாசனம்
பற்றி எரிகவென்று அறம்பாடச்
சொல்வறண்டு போன கவிஞனடி
நான்.
பெண்ணே ! பொய்வாழுதடி
போடி போன இலட்சம் உயிர்களோடு
சேர்ந்து.

காணக் கண்ணில்லா அரசர்களின்
காலிடுக்குகளினூடுன்
ஈனக்குரல் கேட்டுக் கொண்டிருக்கும்

**தேவஅபிரா**

**குளோபல் தமிழ்ச் செய்திகள்**

# கவி முரசு

# பிரியா நீ அழகானவள்

நெருப்பு மலரின் மனோகரம்
கொண்டவள்

உனது அழகையும் மனோகரத்தையும்
வாடச் செய்ததையிட்டு
அவர்கள்
பெருமையடைந்திருந்தார்கள்.

நம்பிக்கையினதும் ஆத்ம
மகிழ்வினதும் ஒலியான "சாது"
ஆலங்கட்டி மழை ஒலிபோற்
சாரமிழந்து
சரணடைந்து காலில்
விழுந்தவர்களைச் சூழ்ந்தது.

மூடாத கண்களுடன் பக்தர்கள்
சிவனோளிபாதமலை அடிவாரத்தில்
வழங்கும்
பணிவும் மரியாதையும் நினைவு
கொள்ளப்படுகிறது.

கட்டற்றுப் கோரப்பசிகொண்டு
மனித இறைச்சிக்கு அலையும்
கோர வனநரிகள் தமிழ்
இதயங்களைக் காயப்படுத்தின.

மூலம்:
லகிரு மதுசங்கலியனாராச்சி (Lahiru MadhusankaLiyanaarachchi)ஆங்கில மொழிபெயர்ப்பு:வோயித் கருணாநாயக்க(WojithKarunanayake) தமிழில்: குளோபல்தமிழ்ச் செய்திகளிற்காக தேவ அபிரா

# தெருநாய்களின் மன்றாட்டம்



வாருங்கள்...
வந்தெமைப் புணருங்கள்
வன்மத்துடன்...!

எம் முகங்களை-உம்
கோரப் பற்களால்
குதறிக் கிழியுங்கள்...

முலைகளைக் கடித்துச்
சதை தின்னுங்கள்...

அழுக்கு அப்பிய நகங்களால்
அடிவயிறுகளைப் பிறாண்டுங்கள்...

கருவறைகள் கிழிந்து சிதையும்
வரை... ஆழமாய்...மிக ஆழமாய்...

இன்னும் வெறி
தணியவில்லையெனில்
பன்றிகளையும் கழுதைகளையும்
குதிரைகளையும்
யானைகளையும்..!

எல்லாம் முடிந்து
இரத்த ஏப்பத்தின் பின்னரெமைச்
சுட்டுக் கொல்லுங்கள்...
மன்றாட்டமாய் உங்களிடமொரு
வேண்டுகோள்...

கோணேஸ்வரிகளையும்
கிரு'ாந்திகளையும்
சாரதாம்பாள்களையும்
இசைப்பிரியாக்களையும்
இன்னுமுள்ள எல்லா
அபலைகளையும்
விட்டுவிடுங்கள்...!

**எஸ். ஹமீத்**

**உலக தமிழ்ச் செய்திகள்**

# ஒதியமலை சுற்றிவளைப்பு தமிழரின் காணிகளை அபகரிக்க பெரும்பான்மையினர் முயற்சி

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான்பிரதேசசெயலாளர் பிரிவில் அடங்கும் ஒதியமலைப் பகுதியல் உள்ள தமிழ் மக்களின் காணிநிலங்களை அபகரிப்பதற்காக அப்பகுதியை பெரும்பான்மையினர் சுற்றிவளைத்துள்ளனர் என உலக தமிழ்ச் செய்திகள் செய்தி வெளியிட்டுள்ளனர்.தமிழ் மக்கள் காலம் காலமாக வாழ்ந்த பூர்வீக நிலப்பகுதி ஒதியமலை. இந்தப் பகுதியிலிருந்து 1982ஆம் ஆண்டில் மக்கள் விரட்டியடிக் கப்பட்டனர். இடம்பெயர்க்கப்பட்ட மக்கள் 2010ஆம் ஆண்டில்மீள்குடியேறஅனுமதிக்கப்பட்டனர்.

இப்பகுதியில் மக்கள் மீள் குடியேற அனுமதிக்கப்பட்டபோதும் சுமார் 200 ஏக்கர் வயல் நிலப்பகுதியை மக்களுக்குவழங்காமல் இராணுவத்தினர் கையப்படுத்தி வைத்திருந்தனர். தமது வயல் நிலங்களை விடுவிக்குமாறு மக்கள் தொடர்ந்து கோரி வந்தனர்.

இந்நிலையில் கடந்த சில தினங்களாக இந்தப் பகுதியில் குடியேற்றப்படும் நோக்குடன் சிங்களவர்கள்கொண்டுவரப் பட்டுள்ளனர். இவர்கள்தமிழ்மக்களின் பூர்வீகவயல் நிலங்களில்இராணுவததின்பாதுகாப்புடன் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டனர்.

தற்பொழுது அந்த நிலங்களில் குடியேற முற்படுவதனால் இந்த நடவடிக்கை தமிழ் மக்கள் மத்தியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. குறித்தநிலங்கள்தமக்குச்சொந்தமானவை என்பதற்கான அனைத்து ஆதாரங்களும் உள்ளன என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

தாம் உற்பத்தியாக்கிய பனை மரங்கள் முதல் தமதுஉழைப்பால் உருவாக்கப்பட்ட நிலமே அதற்கு ஆதாரம் என்றும் குறிப்பிடும் ஒதியமலை மக்கள் தமது நிலத்தில் யாரும் குடியேற அனுமதிக்கப் போவதில்லை என்று குறிப்பிடுகின்றனர்.

சிங்கள மக்களுக்கு தெற்கில் நிலங்களும் வளமும் உள்ள பொழுது தமது நிலத்தை ஏன் அபகரிக்க வருகின்றனர் என்று ஒதியமலை மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

தமது நிலத்தை அபகரிக்க இராணுவத்தினரும் அரசுமே சிங்கள மக்களை இவ்வாறு நில அபகரிப்பு ஊக்கப்படுத்தியிருப்பதாகவும் மக்கள் குறிப்பிடுகின்றனர். இதனைப் புரிந்துகொண்டு சிங்கள மக்கள் தமது நிலத்தை அபகரிக்காமல் அப்பகுதியை விட்டு வெளியேறி தமது பகுதிகளுக்குச் சென்று வாசிக்க வேண்டும் என்றும் விநயமாகவும் மனிதாபிமானமாகவும் கோருவதாக ஒதியமலை மக்கள் குறிப்பிடுகின்றனர்.


30 வருடங்களுக்கு மேலாக போரினால்இடம்பெயர்ந்து சொல்லணாத் துன்பங்களை அனுபவித்த மீண்டதாகக் குறிப்பிடும் ஒதியமலை மக்கள் தமத்திடம் எஞ்சியுள்ள நிலத்தையும் அபகரிக்க வேண்டாம் என்றும் கோருகின்றனர்.

தமிழ் அரசியல் தலைவர்களும் சர்வதேசமும்தமதுநிலத்தை அபகரிக்கும் முயற்சியை தடுக்க வேண்டும் என்றும் ஒதியமலைப்பிரதேச மக்கள்வேண்டுகோள்விடுத்திருக்கின்றனர்.ஒதியமலையிலிருந்து குளோபல் தமிழ் விசேட செய்தியாளர்

**உலகை தமிழ்ச் செய்திகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈகோ இல்லாத அனிருத்



பரபரப்பான இசையமைப்பாளர் மட்டுமல்லாமல், பாடகராகவும் மாறிவிட்டார் இசையமைப்பாளர் அனிருத். 3 படத்தின் வொய் திஸ் கொலவெறி பாடல் மூலம் புகழின் உச்சத்திற்கு சென்றவர் அனிருத்.

இதன் பின்பு எதிர்நீச்சல், வணக்கம் சென்னை படங்களின் பாடல்களும் ஹிட்டானதால் பிரபலமாகி விட்டார். தற்போது தனுஷின் வேலையில்லா பட்டதாரி, சிவகார்த்திகேயனின் மான் கராத்தே, ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடிக்கும் படம் ஆகிய 3 படங்களுக்கு இசையமைத்து வருகிறார்.

இந்நிலையில் பிற இசையமைப்பாளர்களின் இசையில் பாடவும் ஆரம்பித்திருக்கிறார். இவரை சமீபத்தில் பாட வைத்திருப்பது டி.இமான். ஆன்ட்ரியாவுடன் ஒரு படத்தில் பாடிய அனிருத், இப்போது ஸ்ருதிஹாசனுடன் வேறொரு படத்தில் பாடியும் இருக்கிறார். இந்த அனுபவங்கள் ஒரு புறம் இருக்க, விஜய் படத்திற்கு இசையமைக்கிற வேலையும் அவரை பரபரப்பாக்கியிருக்கிறது.

பொதுவாகவே விஜய் படத்திற்கு இசையமைக்கும் இசையமைப்பாளர்கள் ட்யூனை அவருக்கு அனுப்பி அவரது ஒப்புதல் பெறுவது வழக்கம். இந்த விஷயத்தில் துளி கூட ஈகோ பார்க்கவில்லையாம் அனிருத். அப்படியே தனது இசையில் விஜய்யை பாட வைத்து விடுவதிலும் ஆர்வமாக இருக்கிறாராம்.

# அனுஷ்காவுக்கு விரைவில் டும் டும் டும்



அருந்ததி படத்தின் மூலம் ரசிகர்களின் மனதில் நீங்கா இடம்பிடித்த அனுஷ்காவுக்கு விரைவில் திருமணம் நடக்கவுள்ளது.

தமிழ் மற்றும் தெலுங்கில் முன்னணி நடிகையாக வலம் வந்து கொண்டிருக்கிறார் அனுஷ்கா.விஜய், சூர்யா மற்றும் விக்ரம் என முன்னணி நடிகர்களுடன் ஜோடி சேர்ந்துள்ளார். தற்போது தமிழ், தெலுங்கில் உருவாகி வரும் ருத்ரமாதேவி படத்தில் நடித்து வருகிறது.

விரைவில் இவர் நடித்த இரண்டாம் உலகம் படமும் வெளியாக உள்ளது. இந்நிலையில் இவர் புதுபட வாய்ப்புகளை தவிர்ப்பதால், திருமண ஏற்பாடுகள் நடப்பதாக பரவலாக பேசப்படுகிறது. தற்போது 31 வயதாகும் அனுஷ்காவுக்கு, முகத்திலும் முதிர்ச்சி தெரிகிறது.

இதனால் இளம் நடிகர்கள் அவரை ஓரம் கட்ட ஆரம்பித்து விட்டனராம். இதற்கிடையே பெற்றோரும் அனுஷ்காவுக்கு பொருத்தமான மாப்பிள்ளைகளை தேடி வருகின்றார்களாம்.

ஆந்திர தொழில் அதிபர்கள் பலர் அனுஷ்காவை திருமணம் செய்து கொள்ள விருப்பம் தெரிவித்து உள்ளனர். அவர்கள் ஜாதகங்களை வாங்கி பெற்றோர் பொருத்தம் பார்த்து வருகிறார்கள். நிச்சயமாக அடுத்த வருடம் ஆரம்பத்தில் அனுஷ்காவுக்கு திருமணம் நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# காதல் வலையில் சிக்கிய தமன்னா



கிரிக்கெட் வீரர் ஒருவருடன் காதல் கிசுகிசுவில் சிக்கியுள்ளாராம் தமன்னா. தமிழில் பல முன்னணி நடிகர்களுடன் நடித்துள்ள தமன்னா சக நடிகர் ஒருவருடன் கிசுகிசுவில் சிக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது மீண்டும் காதல் வலையில் விழுந்துள்ளாராம். இப்போது சிக்கியிருப்பது பிரபல விளையாட்டு வீரர் விராத் கோலியுடன். தமிழில் பட வாய்ப்புகள் கிடைக்காததால் தெலுங்கில் பிஸியாக இருந்த தமன்னா பின்னர் அப்படியே பாலிவுட்டுக்குச் சென்றார்.

முதல் படம் 'ஹிம்மத்வாலா சமீபத்தில் வெளியாகி படுத்துவிட்டது. ஆனாலும் தமன்னாவின் தாராளக் கவர்ச்சி அவருக்கு இன்னும் சில பட வாய்ப்புகளை பாலிவுட்டில் பெற்றுத் தந்துள்ளது. தற்போது தமிழில் 'வீரம் படத்தில் அஜித் ஜோடியாக நடிக்கிறார்.

மேலும் இட்ஸ் என்டர்டெய்ன்மென்ட் என்ற இந்தி படத்திலும் ஏகடு என்ற தெலுங்கு படத்திலும் நடித்துக் கொண்டிருக்கிறார். இந்நிலையில் விராத் கோலியுடன் விளம்பர படமொன்றில் சேர்ந்து நடித்தார். அப்போது தமன்னாவிடம் சிக்கிய விராத் கோலி அவரின் காதல் வலையில் விழுந்துள்ளாராம். இருவரும் இப்போது இணைபிரியாத காதலர்களாக வலம் வருகிறார்களாம். இந்த மாதிரி கிசுகிசுக்களில் சிக்குவது கோலிக்கு புதிதல்ல. ஏற்கனவே பல இந்தி நடிகைகளை தன் வலையில் விழ வைத்த இவரிடம் இப்போது வசமாக சிக்கியுள்ளாராம் தமன்னா.


## சூடு பிடிக்கும் ஜில்லா

பொங்கல் வெளியீடு என்று அறிவித்துவிட்ட நிலையில் சூடு பிடித்துள்ளது ஜில்லா. விஜய், மோகன் லால், காஜல் அகர்வால் என்று நட்சத்திர கூட்டணியில் உருவாகியிருக்கும் இப்படம் தொடங்கிய நாளிலிருந்தே படத்தின் மீதான எதிர்பார்ப்பு கிளம்பியுள்ளது. வருகிற பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வெளியிட முடிவு செய்துள்ள இப்படத்தின் படப்பிடிப்பு இன்னும் முடிவடையவில்லை.ஆனால் அதற்குள்ளாகவே ஜில்லா படத்தை வாங்கி வெளியிடுவதில் விநியோகஸ்தர்கள் மத்தியில் போட்டி உருவாகி உள்ளது.

சமீபத்தில் வெளியான ஆரம்பம் படத்தின் விநியோக உரிமையை வாங்கிய அதே விநியோகஸ்தர்தான் ஜில்லா படத்தின் கோவை வெளியீட்டு உரிமையையும் பெரிய விலை கொடுத்து வாங்கியிருக்கிறாராம்.

# சினிமுரசு

## ஆரம்பம்



தமிழ் சினிமாவின் வழக்கமான பழிவாங்கும் கதையை ஆக்ஷனும், த்ரில்லரும் கலந்து சுவாரசியமாக்க முயற்சி செய்திருக்கிறார் விஷ்ணுவர்தன்.

சென்னையிலிருந்து மும்பைக்கு வரும் சாப்ட்வேர் இன்ஜினியரான ஆர்யாவை கடத்துகிறார் அஜித். ஆர்யாவின் கல்லூரித் தோழியும், அஜித்தின் கூட்டாளியுமான நயன்தாரா இதற்கு உதவுகிறார். இதில் ஆர்யாவின் காதலி டாப்சியையும் நம்பவைத்து தனது பாதுகாப்பில் வைத்துக்கொள்கிறார் அஜித். மேலும் அவரை வைத்து ஹேக்கிங்கில் தேர்ந்தவரான ஆர்யாவை மிரட்டி காரியம் சாதித்துக்கொள்கிறார்.

இந்நிலையில் ஆர்யாவின் மூலம் செய்தி அலைவரிசை உரிமையாளர் ஒருவருக்கு பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுத்துகிறார். பிறகு அவரைக் கடத்திக் கொல்லும் முயற்சியில் காவல்துறையினரால் கைதுசெய்யப்படுகிறார்.அஜித் ஏன் இவற்றையெல்லாம் செய்கிறார் என்ற குழப்பத்தில் இருந்த ரசிகர்களுக்கு இடைவேளைக்கு பின்பு தான் தெளிவு கிடைக்கிறது.

உள்துறை அமைச்சர், காவல்துறை உயரதிகாரி மற்றும் செய்தி அலைவரிசை உரிமையாளர் ஆகியோர் இணைந்து செய்யும் ஒரு மாபெரும் ஊழலால் தனது நண்பர் ராணா டகுபதியை இழக்கிறார் அஜித். தன் நண்பனின் மரணத்துக்கு காரணமானவர்களை அம்பலப்படுத்துவதோடு பணத்துக்காக பயங்கரவாதத்துக்குத் துணைபோகும் அவர்களின் மற்றொரு திட்டத்தையும் தகர்ப்பதே மீதிக்கதை. அஜித் ஒரு நேர்மையான அஸிஸ்டண்ட் கமிஷ்னர். படத்திற்கு மையபலம் அஜித் தான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

படத்தில் அஜித்துக்கு வசனங்கள் அதிகமாக கிடையாது. அனைத்தும் ஆக்சன் தான்.ஆனால் மொத்தமாக கிளைமாக்சில் கேப்டன் மாதிரி ஊழல், லஞ்சம், அரசியல் என சமகாலப் பிரச்சனைகளைப் 'பன்ச்' களாக அடித்து பின்னியெடுக்கிறார். ராணாவின் தங்கச்சியாக நயன்தாரா வருகிறார். படம் முழுவதும் அஜித் கூடவே இருக்கிறார். நடிப்பிலும் குறை சொல்ல ஒன்றும் இல்லை, கவர்ச்சிக்கும் இடமிருக்கிறது. சாப்ட்வேர் இன்ஜினியராக வருகிறார் ஆர்யா. துறு துறு நடிப்பில் ஈர்க்கிறார். இவரின் காதலியாக வரும் டாப்ஸி அழகாக இருக்கிறார். கடமையைச் செய்யும்போது உயிரிழக்கும் காவல் அதிகாரியாக வரும் ராணா டகுபதி சிறிய பாத்திரம் என்றாலும் மனதில் பதியும் வகையில் செய்திருக்கிறார்.மற்றொரு நேர்மையான காவல்துறை அதிகாரியாக கிஷோர் தனக்கேயுரிய மிடுக்கான தோற்றத்தில் வந்து தன் பங்கை சிறப்பாகச் செய்திருக்கிறார். வில்லனான மகேஷ் மஞ்ஜ்ரேக்கர் பேசும் வசனங்கள் நகைச்சுவைக்கு உத்தரவாதம் அளிக்கின்றன.

விஷ்ணுவர்தன் இந்தப் படத்திலும் அஜித்தை மிகவும் ஸ்டைலிஷ்ஷாக காட்டியிருக்கிறார். யுவன்ஷங்கர் ராஜாவின் பாடல்கள் எதுவும் நினைவில் தங்கவில்லை. அந்தக் குறையை பின்னணி இசையில் சமன் செய்துவிட்டார். ஓம்பிரகாஷின் ஒளிப்பதிவு மும்பையை அதன் இயல்பு மாறாமல் பதிவு செய்திருக்கிறது. துப்பாக்கிச் சண்டைக் காட்சிகளும் கண்களுக்கு அலுப்பூட்டாத வகையில் படம்பிடிக்கப்பட்டிருக்கின்றன. ஹாலிவுட் படத்திற்கு எந்த வகையிலும் குறைவில்லாமல் தமிழ் சினிமா ரசிகர்களின் ரசனைக்கு ஏற்ப விறுவிறுப்பாக செல்கிறது ஆரம்பம்.

ஹாலிவுட் படத்தை அணு அணுவாக ரசித்தவர்களுக்கு வேண்டுமானால் இந்தப்படம் திருப்தியளிக்காமல் போகலாம். ஆனால் சாராசரி தமிழ் ரசிகனுக்கு, முக்கியமாக தல ரசிகர்களுக்கு இந்தப்படம் செமத்தியான தீபாவளி விருந்து.



## யு சான்றிதழ் வாங்கிய இரண்டாம் உலகம்

எந்தவித கட்டுமின்றி தணிக்கை குழுவினரிடம் பாராட்டு பெற்றுள்ளது இரண்டாம் உலகம்.

செல்வராகவனின் பிரம்மாண்டமான இயக்கத்தில் உருவாகியிருக்கும் படம் இரண்டாம் உலகம். இப்படத்தில் ஆர்யா, அனுஷ்கா இருவரும் இரண்டு வேடத்தில் நடித்துள்ளனர். ரொமாண்டிக் பேண்டசி திரைப்படமான இப்படத்தை பெரும்பொருட்செலவில் தயாரித்திருக்கிறது பி.வி.பி சினிமா நிறுவனம்.

ஹாரிஸ் ஜெயராஜ் இப்படத்திற்கு இசையமைக்க, கொலைவெறி புகழ் அனிருத் பின்னணி இசையமைத்துள்ளார்.


தற்போது இப்படத்தை பார்த்த தணிக்கை குழுவினர், படத்திற்கு யு சான்றிதழ் வழங்கியுள்ளனர். அதுமட்டுமின்றி, இப்படத்தில் வித்தியாசமான கதைக்களத்தை கையாண்டுள்ளதால் படக்குழுவினரை வெகுவாக பாராட்டினார்களாம் தணிக்கை குழுவினர்.

ஏற்கெனவே வெளியான இப்படத்தின் பாடல்கள் மற்றும் டிரைலர்கள் ரசிகர்களிடைய நல்ல வரவேற்பை பெற்றது குறிப்பிடத்தக்கது.

இப்படம் ஒரே நேரத்தில் தமிழிலும், தெலுங்கில் வர்ணா என்ற பெயரிலும் வருகிற நவம்பர் 22ம் திகதி வெளியாகவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித உணர்வுகளை வெளிப்படுத்தும் ரோபோ உருவாக்கம்




இன்றைய காலகட்டத்தில் ரோபோக்களின் உருவாக்கமானது அசுர வளர்ச்சி கண்டுள்ளது. மனிதனுக்கு நிகரான ரோபோவை உருவாக்குவதில் உலகெங்கிலுமுள்ள விஞ்ஞானிகள் முனைப்புக் காட்டி வருகின்றனர்.

இந்நிலையில் டெக்ஸாஸிலுள்ள RoboKind எனும் நிறுவனம் Zeno R25 எனும் மனித உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடிய ரோபோவினை வடிவமைத்துள்ளது. எனினும் இதனை மேலும் மேம்படுத்தும்பொருட்டு Kickstarter தளத்தின் ஊடாக போட்டி ஒன்றினை நடத்திவருகின்றது. இதேவேளை இந்த ரோபோவிற்கு முன்னர் உருவாக்கிய Zeno R50 எனும் ரோபோவின் பெறுமதியானது 16,000 டொலர்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டுப் பையன்

## சூரிய சக்தியில் இயங்கும் துவிச்சக்கரவண்டி அறிமுகம்



சூரிய சக்தியிலும் மனித சக்தியிலும் இயங்கக்கூடிய அதிநவீன துவிச்சக்கரவண்டி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. Ele எனப்படும் இத்துவிச்சக்கர வண்டியில் உள்ள இரு சக்கரங்களுக்கு நடுவிலும் வட்ட வடிவிலான சூரியப்படலம் காணப்படுகின்றது. இது சூரிய ஒளி கிடைக்கும் திசையினை நோக்கி 30 டிகிரி வரை திருப்பக்கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

சூரிய சக்தி மூலம் உருவாக்கப்படும் மின்சக்தியானது விசேட மின்கலத்தில் சேமிக்கப்படுவதன் மூலம் துவிச்சக்கர வண்டி இயங்குவதற்குரிய வலு வழங்கப்படுகின்றது. சூரிய சக்தி இல்லாத தருணங்களில் மனித வலு மூலம் இயக்கக்கூடியதாகவும் காணப்படுகின்றது.

## காப்பி அருந்துவதற்கு சிறந்த நேரம் எது தெரியுமா?

நோய் நொடிகளற்ற மனித வாழ்வை நோக்கி செல்ல இன்று பல்வேறு ஆராய்ச்சிகள் இடம்பெற்றுவருகின்றன. இதன் ஒரு அங்கமாக உடலுக்கு உற்சாகத்தை வழங்கும் காப்பி குடிப்பதற்கு சிறந்த நேரம் காலை 9.30 இருந்து காலை 11.30 வரையான காலப்பகுதி என நரம்பியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நேரத்திலேயே காப்பியில் காணப்படும் காபைன் (caffeine) எனும் பதார்த்தம் உடல் இயக்கத்தினை ஒழுங்குபடுத்தும் கோட்டிசோல் (cortisol) ஓமோனுடன் சிறந்த முறையில் செயற்படக்கூடியதாக இருக்கும் என்று அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

கோட்டிசோல் ஆனது தூக்கத்திலிருந்து எழும்பும்போது மிகவும் குறைந்த நிலையில் காணப்படுகின்றது எனவும், 8 மணி தொடக்கம் 9 மணி வரையான காலப்பகுதியில் மேலும் மந்தமான நிலையை அடைகின்றது எனவும் ஸ்டீபன் மில்லர் எனும் நரம்பியல் நிபுணர் தெரிவித்துள்ளார்.

## மூளை சுத்தமாக நன்றாக தூங்குங்கள்! விஞ்ஞானிகள் தகவல்

அதிக நேரம் தூங்குவது உடல் நலத்துக்கு மிகவும் நல்லது என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவின் ரோசெஸ்டர் பல்கலைக்கழகத்தை சேர்ந்த விஞ்ஞானி மைகென் நெதர்கார்டு தலைமையிலான குழுவினர் மனிதர்கள் தூங்குவது ஏன்? என்பது குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

அதில், நன்றாக தூங்கும் போது தான் மூளை சுத்தம் செய்யப்படுவது கண்டறியப்பட்டது. தூங்கும் போது பெருமூளையின் தண்டு வட திரவம் மூளையை சுற்றி பீச்சி அடிக்கப்படுகிறது. அப்போது மூளைக்கு வெளிப்புறம் படிந்திருக்கும் மூலக்கூறுகளின் சிதைந்த பொருட்களும், நச்சு புரோன்டீன்களும் அப்புறப்படுத்தப்படுகின்றன. இதனால் உடல் நலத்திற்கு கெடுதல் ஏற்படாமல் பாதுகாக்கப்படுகிறது.இந்த ஆய்வுக்கு விஞ்ஞானி மைகென் நெதர்கார்டு குழுவினர் சுண்டெலிகளை பயன்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

# ஒரு கொலையின் கதை

28 (மைபன்)

**08ம் திகதி மாலை வெயில் மங்கியிருந்த போது இரண்டு வழிப்போக்கர்கள் அந்த விடுதியின் வரவேற்பறையில் இருந்த இளைஞனை அணுகினர்.**

"மாலைவணக்கம்.... அறையொன்றை வாடகைக்கு.." பெற்றுக்கொள்ளலாமா? என அவர்கள் அந்த இளைஞனிடம் வினவினார்கள்...

"பெற்றுக்கொள்ளலாம்... ஆனால் எவ்வகையான அறைகள் உங்களுக்குத் தேவையென்று சொல்வீர்களா?..."

"எங்களுக்குச் சாதாரண அறைகள் இரண்டு வேண்டும்... இரு நாட்கள் தங்கிச் செல்லத்தானே..."

"காலியாக இருக்கின்றது... இரண்டு அறைகள் முதலாவது மாடியில் ... இலக்கம் 101 மற்றும் 102 ஆகியன... அவற்றைப் பார்க்கின்றீர்களா?"

" தேவையில்லை.. ஏற்கனவே உங்களது அறைகள் சம்பந்தமாக எமக்கு தெரியும்.... உங்களது விடுதியில் சாதாரண அறைகளில் கூட நல்ல காற்றோட்டமும்...வாசலில் நல்ல வரவேற்பும் இருக்கும் என எமது நண்பர்கள் சொன்னார்கள்"

மெல்லிய முன்முறுவல் அந்த இளைஞனின் மகத்தில் வெளிக்கிளம்பியது "ஓ.. அப்படியா? யாரந்த இரண்டு நண்பர்களும்? எப்போது அவர்கள் எமது விடுதியில் தங்கியிருந்தார்கள்?" என்று அந்த இளைஞன் தனது கேள்வியைத் தொடுத்தான்...

வந்தவர்களில் உருவரின் முகத்தை மற்றையவர் நோக்கினார். கண்களில் கேள்வியொன்று தொக்கி நின்றது. அக்கேள்விக்குச் சின்னத் தலையாட்டலுடன் மற்றையவர் பதிலளித்தார். அதைத் தொடர்ந்து முதலாமவர் தனது காற்சட்டைப் பைக்குள்ளிருந்து இரண்டு படங்களை கையில் எடுத்தார்.

"இவர்கள் தான் எமது நண்பர்கள்... சுமார் இரண்டு மாதங்களுக்கு முன் உங்களது விடுதியில் வந்து தங்கிச் சென்றார்கள். அவர்கள் உங்களைப் பற்றிச் சிறப்பாகச் சொன்னதால்தான் நாங்கள் உங்களது விடுதியைத் தேடி வந்தோம்..."

"எங்கே காட்டுங்கள்.... அவர்களது படத்தை... எனக்கும் ஞாபகம் இருக்கின்றதா என்பதைப் பார்க்கலாம்...."

அப் படங்களைக் கண்ணுற்ற அந்த வரவேற்பாளனின் முகத்தில் கடும் அசூசையின் வெளிப்பாடு தெரிந்தது. உடனடியாகவே படங்களில் இருந்தவர்களை அவன் அடையாளம் கண்டு கொண்டான் என்பதை வந்தவர்கள் இருவரும் குறித்துக் கொண்டனர்.

அந்தப் படங்களைப் பார்த்த பின்னர் வந்திருந்த இருவரையும் அவ்வரவேற்பாளன் நட்புடன் அணுக மாட்டான் என்பதை அவனது நடவடிக்கைகள் வெளிக்காட்டின....

"ஓ...இவனுகளா?.." மரியாதை குறைந்திருந்ததை இருவரும் குறித்துக் கொண்டனர்.

"எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு..."

எதைத் தேடி அவ்விருவரும் அங்கு வந்திருந்தார்களோ.... எந்த பதிலை அந்த வரவேற்பாளனிடம் இருந்து பெறுவதற்குத் தாம் பலமான எத்தனங்களை இட வேண்டும் என எண்ணியிருந்தார்களோ.... அந்த பதில் மிகச் சுலுவாக வரவேற்பாளனின் வாயிலிருந்து வெளியில் விழுந்தது.

"இவங்கள் இரண்டுபேரையும் எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு... காசு கட்டாமல் விடுதியை விட்டு ஓடப் பாத்தவங்கள்" எவ்வித அலட்டலுமின்றித் தெளிவாக அந்த வரவேற்பாளன் அவர்களிடம் இதைக் கூறினான். கூறிய கையுடன் வரவேற்புப் பதிவுப் புத்தகத்தையும் சடாரென மூடினான்.

வந்திருந்த இருவரின் முகத்திலும் மென்புன்னகை பரவியது...அவர்கள் ஒரு மறுப்பறிவிப்பை அந்த வரவேற்பாளனிடம் எதிர்பார்த்தார்கள்.....

"மன்னிக்கவும்... உங்களுக்கு எமது விடுதியில் அறைகள் கொடுக்க முடியாது" கறாரான வார்த்தைகள் பதிலாகின.

"நன்றி... நாமும் உங்களது விடுதியில் தங்குவதற்காக வரவில்லை நண்பரே" முதலாமவரின் குரலில் மெதுவாக அதிகாரத் தோரணை ஏறியிருந்தது.

"நாங்கள் விசேட புலனாய்வுத்துறையினர்... இதோ எங்களது அடையாள அட்டை"

இருவரில் ஒருவர் தனது ஆளடையாளத்தை வெளிப்படுத்தினார். அதனைக் கண்ணுற்ற வரவேற்பாளனின் முகத்தில் சிறிதான தடுமாற்றமொன்று இழையோடியது

"பயப்பட வேண்டாம்... நண்பரே...நாங்கள் உங்கள் மீது விசாரணைகள் எதற்காகவும் வரவில்லை... இந்த இருவர் மீதும் விசாரணைகள் மேற்கொள்ளத்தான் வந்திருக்கின்றோம்...நீங்கள் சிறிது ஒத்துழைத்தால் போதுமானது... [illegible] எமது விசாரணைகள் [illegible] கொண்டு சென்று விடுவோம் என புலனாய்வாளர்களில் ஒருவர் தெளிவு படுத்தினார். வரவேற்பாளனின் முகத்தில் சலனம் விடைபெற்றது.



"ஒரு பொருத்தமான இடத்தை நீங்கள் காட்டினால் அங்கிருந்து நாம் பேச வசதியாக இருக்கும்... அத்துடன் எமது பேச்சுக்களின் போது நீங்கள் எழும்பிச் செல்ல முடியாது... எனவே மற்றொருவரை வரவேற்பறைக்கு அழைத்து வாருங்கள்... அத்துடன் வரவேற்புப் பதிவுப் புத்தகத்தையும்... பற்றுச்சீட்டுப் புத்தகத்தையும், வருவோர் நிரப்பித்தரும் பதிவேட்டு அட்டைகளையும் எடுத்து வருகின்றீர்களா?" என்ற வினாவிற்கு பதிலாக அவ்வரவேற்பாளன் சரியெனத் தலையாட்டினான்

பற...பற...வென வேலைகள் நடந்தேறின. அதற்குள் விடுதியின் உரிமையாளருக்குச் செய்தி போகவே அவர் திருகோணமலையின் உயர் காவல்துறை அதிகாரியொருவருடன் தொடர்பு கொண்டு தனது விடுதியில் இவ்வாறு இருவர் வந்திருப்பதைத் தெரியப்படுத்தினார்.

சிறிது நேரத்தின் பின் அவ்வாறு வந்திருப்பவர்களைப் பற்றி அஞ்ச வேண்டாம் என்றும் அவர்கள் உரிய அதிகாரத்துடனேயே அங்கு வந்திருப்பதாகவும் அவர்களுக்கு தேவையான தகவல்களை வழங்குமாறும் அக் காவல்துறை உயர் அதிகாரி விடுதி உரிமையாளரைக் கேட்டுக் கொண்டார்.

அதன்படி வரவேற்புப் பகுதியின் ஒதுக்குப் புறமொன்றில் வரவேற்பாளனும், புலனாய்வாளர்கள் இருவரும் வட்டமாக அமர்ந்து கொண்டு தம் உரையாடலை ஆரம்பித்தனர்.

" நாம் படத்தில் காட்டிய இருவரையும் எவ்வாறு ....... (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## எமது மாவட்டம் சர்வதேச ரீதியில் தடம் பதித்துள்ளது: ரிசாட்



எமது மாவட்டம் சர்வதேச ரீதியில் இன்று விளையாட்டுத்துறையில் தடம் பதித்துள்ளது என வர்த்தக முதலீட்டுத்துறை அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவித்தார். 41 ஆவது ஆசிய கால்பந்தாட்ட போட்டிக்காக இலங்கையிலிருந்து 19 வயது பிரிவினருக்கான தேசிய கால்பந்தாட்ட அணியானது கடந்த ஏழாம் திகதி தாய்லாந்து புறப்பட்டு சென்றுள்ளது. இவ் அணியில் மன்னார், புனித சவேரியர் ஆண்கள் கல்லூரி மாணவன் ஜே.யோண்சன் இடம்பெற்றுள்ளார். தனது இப்பயணம் குறித்து மேற்படி மாணவன் அமைச்சர் றிசாட் பதியுதீனிடம் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, தாய்லாந்தில் நடைபெறும் ஆசிய கால்பந்தாட்ட போட்டியில் கலந்து கொள்ளும் பொருட்டு மன்னாரில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு வன்னி மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவர் என்ற வகையில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் இன்னும் பல சாதனைகளை மாணவர்கள் புரிய வேண்டும். மாணவர்கள் தமது கல்வி இலட்சியத்தினை மட்டும் நோக்காக கொண்டு செயற்படுவதன் மூலம் தத்தமது பெற்றோர்களுக்கும் மாவட்டத்துக்கும், தேசத்துக்கும் உதவி செய்ய முடியும். அதேவேளை எதிர்காலத்தில் விளையாட்டுத்துறை மேம்பாட்டுக்கு மேலும் புத்தூக்கம் அளிக்கும் திட்டங்களை முன்னெடுக்க உள்ளேன். என்று அவர் மேலும் தெரிவித்தார். மேற்படி அணியினர் எதிர்வரும் 16 ஆம் திகதி நாடு திரும்பவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## செரண்டிப் சர்வதேச ரக்பி கிண்ணம் : போலந்தை வீழ்த்தியது இலங்கை

டயலொக் செரண்டிப் சர்வதேச ரக்பி கிண்ணத்திற்காக மூன்று நாடுகளுக்கிடையில் கொழும்பு குதிரைப்பந்தயத்திடலில் நடைபெற்று வந்த ரக்பி போட்டிகளில் இரண்டாம் இடத்திற்காக நடைபெற்ற நேற்றைய போட்டியில் போலந்தை எதிர்த்தாடிய இலங்கை 26க்கு 25 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டியுள்ளது. இதன்மூலம் ஐரோப்பிய நாடு ஒன்றுக்கு எதிராக விளையாடிய முதலாவது சர்வதேச ரக்பி போட்டியிலேயே இலங்கை வெற்றி பெற்றமை விசேட அம்சமாகும். போட்டியில் இலங்கை சார்பாக நிரோ'ன் பெர்னாண்டோ இரண்டு ட்ரைகளை வைத்ததுடன் ரீஸா முபாரக் மூன்று பெனால்டிக்களையும் ஒரு ட்ரொப் கோலையும் போட்டார். இந்த வெற்றியானது சர்வதேச ரக்பி தரப்படுத்தலில் இலங்கை மீண்டும் சில இடங்கள் முன்னேறுவதற்கு வழிவகுத்துள்ளது. இப்போட்டித் தொடரில் ஏற்கெனவே இரண்டு வெற்றி களை ஈட்டியிருந்த மடகஸ்கார் சாம்பியனாகியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## 199 ஆவது டெஸ்டில் சச்சின்







## முரளி ஹார்மனி கிண்ண இருபது-20: கிண்ணத்தை கைப்பற்றியது சென்பீற்றர்ஸ்

முரளி ஹார்மனி கிண்ண இருபது—20 கிரிக்கெட் சுற்றுத் தொடரின் கிண்ணத்தை கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரி அணி கைப்பற்றியது. கண்டி ரினிட்றி கல்லூரி அணி நிர்ணயித்த 102 ஓட்டங்கள் என்ற இலக்கை அடைந்த சென். பீட்டர்ஸ் 4 விக்கெட்டுக்களால் வெற்றியை தனதாக்கி நடப்பாண்டின் சம்பியனானது 2013 ஆண்டுக்கான முரளி ஹார்மனி கிண்ண இருபது—20 கிரிக்கெட் சுற்றுப்போட்டி கடந்த முதலாம் திகதி ஆரம்பமானது. வடமாகாணத்தின் 5 இடங்களில் நடைபெற்ற இச்சுற்றுப்போட்டியில் அகில இலங்கை ரீதியாக 12 அணிகள் களமிறங்கியமை குறிப்பிடத்தக்கது.

## யாழில் முதலாவது புற்றரை துடுப்பாட்ட மைதானம்

யாழில் முதலாவது புற்றரை மைதானம் அமைக்கும் பணிகள் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வருகை தந்த இலங்கை தெரிவுக் குழுவின் தலைவர் சனத் ஜெயசூரிய, யாழில் முதலாவது புற்றரை துடுப்பாட்ட மைதானம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் அமைக்கப்படும் என தெரிவித்திருந்தார். இந்நிலையில் கடந்த முதலாம் திகதி முதல் புற்றரை மைதானம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. யாழ். மாவட்ட துடுப்பாட்ட வீரர்கள், வெளி மாவட்டங்களில் போட்டிகளில் கலந்துகொள்வதில் புற்றரை மைதானம் பெரும் பிரச்சினையாகவிருந்தது. ஏனெனில் யாழ்ப்பாணத்தில் மற்றிங் (சாக்கு விரிப்பு) துடுப்பாட்ட மைதானங்களே இதுவரை காலமும் பயன்படுத்தப்பட்டு வந்தன. இதனால் யாழ்ப்பாணத்தில் விளையாடிப் பழகிய யாழ். மாவட்ட துடுப்பாட்ட வீரர்கள் புற்றரை மைதானங்களில் நடைபெறும் போட்டிகளில் பந்துவீச்சாளர்கள் பந்துவீசுவதிலும், துடுப்பாட்ட வீரர்கள் பந்துவீச்சுக்களை எதிர்கொள்வதிலும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.



## சவாலுக்குத் தயார்: ஜோர்ஜ் பெய்லி



டெஸ்ட் போட்டிகளின் சவாலுக்குத் தயாராக இருப்பதாக அவுஸ்திரேலிய ஒருநாள் சர்வதேசப் போட்டி அணியின் தற்காலிகத் தலைவரான ஜோர்ஜ் பெய்லி தெரிவித்துள்ளார். தற்போது சிறந்த கிரிக்கெட்டை விளையாடி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அவுஸ்திரேலிய அணி அண்மையில் இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த வேளையில் அணித்தலைவராகச் செயற்பட்டிருந்த ஜோர்ஜ் பெய்லி மிகச்சிறப்பான துடுப்பாட்டப் பெறுபேறை வெளிப்படுத்தியிருந்தார். அண்மைக்காலமாக மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளில் ஜோர்ஜ் பெய்லி மிகச்சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தி வரும் நிலையில், இம்மாதத்தில் ஆரம்பிக்கவுள்ள தொடரில் ஜோர்ஜ் பெய்லி சேர்க்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை எழுந்துள்ளது. டெஸ்ட் போட்டிகளுக்குத் தயாராக உள்ளாரா எனக் கேட்கப்பட்டமைக்குப் பதிலளித்த ஜோர்ஜ் பெய்லி, தயாராக இருப்பதாக தான் உணர்வதாக அவர் குறிப்பிட்டார். தனது வாழ்வில் தான் விளையாடிய கிரிக்கெட்டில் தற்போதே மிகச்சிறப்பான கிரிக்கெட்டை விளையாடி வருவதாக அவர் குறிப்பிட்டார் .31 வயதான ஜோர்ஜ் பெய்லி, தனது வயது காரணமாக தனக்கு அதிகமான வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறாது என்பதை உணர்வதாகவும், ஆகவே கிடைக்கும் வாய்ப்பில் தனக்கு விரும்பியவாறு விளையாட விரும்புவதாக ஜோர்ஜ் பெய்லி குறிப்பிட்டுள்ளார். இறுதியாக இடம்பெற்ற சில தொடர்களில் தான் சிறப்பாக விளையாடியமை காரணமாக அதிக தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்ட ஜோர்ஜ் பெய்லி, இதன் காரணமாக தனது பாணியிலான விளையாட்டின் மீது தைரியம் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அரச ஊழியருக்கு மிகை ஊதியம்

அரசின் கூட்டுத்தாபனங்களிலும் கம்பனிகளும் பணியாற்றும் ஊழியருக்கு மிகையூதியம் வழங்கும் முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எதிர் வரும் ஆண்டில் நடைபெற்றதாக எதிர்கூறப்படும். பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதி தேர்தல் அறிவிப்பு எதிர்பார்க்கப்பட்டுக் கொண்டிருக்கும் போது இம் மிகை ஊதியக் கொடுப்பனவு அறிவிப்பு வெளியாகியுள்ளது. இம் மிகை ஊதிய மானது சுமார் 2500 ரூபாவிலிருந்து 12500 வரை இருக்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது.


நிரந்திர மிகையூதியத் திட்ட மொன்று உருவாக்கப்படும் வரை தற்காலிகமாக இம் மிகை ஊதிய திட்டத்தை நடைமுறைப்படுத்தவே சனாதிபதி அனுமதி வழங்கியுள்ளார்.

**the SUNDAY TIMES**

## 1000 புதிய நவீனமய தொழில் நுட்ப ஆய்வு கூடங்கள்

'மஹிந்தோதய' திட்டத்தின் கீழ் 1000 பாடசாலைகளில் அதி நவீன ஆய்வு கூடங்களை வழங்கும் நடவடிக்கை முன்னடுக்கப்பட்டுள்ளது.

இதன் கீழ் சுமார் 62000 கணணிகளும் 1000 மடிக் கணணிகளும் வழங்கப்பட உள்ளன. முதற்கட்டமாக இத் திட்டத்திற்கு 1.7 பில்லியன் செலவாகும் எனத் தெரியவருகின்றது.



## இந்தியாவின் 'ஒருநாள்' திட்டத்தை நிராகரித்தது இலங்கை



வாரத்தில் ஒரு முறைமட்டும் இலங்கைக் கடலில் மீன்பிடிக்க அனுமதிக்குமாறு இந்தியா விடுத்த வேண்டுகோளை இலங்கை நிராகரித்துள்ளது. பாக்கு நீரினை ஊடாக இந்திய மீன்வர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் வார மொன்றில் மூன்று நாட்கள் புகுந்து மீன் பிடிப்பதை தன்னிச்சையான வழக்க மாகக் கொண்டுள்ளனர்.


அவ்வாறு மீன் பிடிக்கும் போது கடலை வழித்தெடுக்கும் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுவதால் கடல் வாழ் உயிரினங்கள் யாவும் அழிவை எதிர் கொள்கின்றன.

## பொதுநலவாய தலைவர்களுக்கு 24 மணி நேர சுகாதார பாதுகாப்பு

பொது நலவாய மாநாட்டிற்கு வருகை தரவுள்ளவர்க்கு 24 மணிநேர சுகாதார நலனோம்பு பாதுகாப்பிகிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## ஐந்து நாட்களில் 19.5 மில்லியன் வருமானம்

கட்டுநாயக்கா கொழும்பு அதி வேகப் பாதையில் முதல் ஐந்து நாட்களில் வருமானமாக 19.5 மில்லியன் வருமானம் உழைக்கப் பட்டுள்ளது. திறந்த முதல் நாளிலே சுமார் 2500 வாகனங்கள் அப் பாதையின் ஊடாகப் பயணித்துள்ளன.



**SUNDAY OBSERVER**

Sri Lanka's English Newspaper with the largest circulation

## நவம்பர் 14 முதல் உலகத் தலைவர்கள்

பொது நலவாய மாநாட்டை முன்னிட்டு நவம்பர் 14ம் திகதி முதல் பல நாடுகளின் தலைவர்கள் இலங்கைக்கு வருகைதர உள்ளனர். ஆரம்ப நிகழ்வு நெலும் பொக்குண அரங்கில் நிகழவுள்ளது. நவம்பர் 4ம் திகதி முதலாவது உத்தியோக பூர்வக் குழு இலங்கைக்கு வருகைதரவுள்ளது. ஐக்கிய இராச்சியத்தின் இளைஞர் குழுவே முதலில் இலங்கைக்குள் வருகை தரவுள்ளனர் இளைஞர்கூட்டத் தொடர் நவம்பர் 10 தொடக்கம் 14 வரை விதம்பாந்தோட்டையில் நடைபெற வுள்ளது.

## எதிர்கட்சியில்பலவீனத்தால் அல்ல மக்கள்வாக்களிப்பது

அரசின் விருத்திப் போக்கான அரசியல் பொருளாதாரக் கொள்கைகளால் கவரப்பட்டே மக்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு வாக்களிக் கின்றனரே தவிர எதிர்க் கட்சிகளின் பலவீனத்தால் அல்ல என பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள் ளார்.

## சந்தையின் கலப்படத் தேங்காய் எண்ணை

ஏனையவகை எண்ணைகள் கலந்த தேங்காய் எண்ணை சந்தையில் உலாவத் தொடங்கியதைத் தொடர்ந்து நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை களத்தில் இறங்கியுள்ளது. அதனைத் தொடர்ந்து "சுத்தமான தேங்காய் எண்ணை" என்ற பட்டியுடன் கலப்படத் தேங்காய் எண்ணை பெருமளவில் புறக் கோட்டைப் பகுதியில் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

## 2.5 மில்லியன் ரூபாத் தங்க வடங்கள் கைப்பற்றப் பட்டன

பயணப் பொதியின்அந்தங்களில் தங்கத்தை வடமாகாத் திரித்துச் செருகி சுங்கத்தின் ஊடாக இந்தியாவிற்குக் கடத்த முனைந்த நபரொருவர் கட்டுனாயக்கா விமான தளத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

## இந்திய மீனவர்களால் இலங்கையின் பொருளாதாரம் பாதிப்பு

சட்டவிரோத இந்திய மீன் பிடியால் இலங்கையின் பொருளாதாரம் பெரும் பாதிப்புக்களை எதிர் கொண்டுள்ளது. வடக்கின் மீனவர்களே இச் சட்டவிரோத மீன்பிடியால் தமது வாழ்வாதாரத்தை இழக்கின்றனர்.

## பொது நலவாய திரைப்பட விழா கொழும்பில்

பொது நலவாயத்தின் 17 நாடுகலிருந்து திரைப்படங்கள் கொழும்பில் திரையிடப் படவுள்ளன. இவ் விழாவில் சர்வதேச திரைப்பட விழாவில் சிறந்த நடிகருக்கான விருதை வென்ற சிங்களப் படமான 'சமகி கத்தாவா' திரையிடப்படவுள்ளது.

## நஞ்சூட்டும் வர்ணப் பூச்சுக்களை கண்டறிய நடவடிக்கை

பல்வேறு வகையான வர்ணப் பூச்சுக்கள் அறிமுகப்படுத்தப் பட்டுக் கொண்டிருக்கும் இந் நாட்களில் அவை சுகாதாரச் சீர்கேடுகளை ஏற்படுத்தி பொதுமக்களை நஞ்சூட்டி விடுகிறதா என்பதை ஆராய்கின்றது நுகர்வோர் பாதுகாப்புச்சபை.

## 86 மில்லியன் தண்டப்பணம்

இவ்வாண்டின் தொடக்கம் முதல் பத்தாம் மாதம் வரைக்குமான காலப்பகுதியில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை 860 லட்ச ரூபாய்களைத் தண்டமாக அறவிட்டுள்ளது.

27,853 சுற்றிவளைப்புக்களில் ஈடுபட்டு இத்தொகை தண்டமாக அறவிடப்பட்டுள்ளதாக தெரிகின்றது. அதிலும் கொழும்பு மாவட்டத்தில் மட்டும் 2434 சுற்றிவளைப்புக்களின் ஊடாக 10 மில்லியன்களுக்கு மேல் தண்டம் அறவிடப்பட்டுள்ளது.

## உடைப்பதை எதிர்க்கும் சட்டவாளம் சங்கம்

வலிகாமல் வடக்கில் இராணுவத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வீடுடைப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு சட்டவாளர் சங்கம் தயாராகி வருகின்றது. 2000 வழக்குகள் நிலுவையிலுள்ள நிலையில் இராணுவத்தின் இந் நடவடிக்கை நீதி மன்றை அவமதிக்கும் செயற்பாடு என சட்டவாளர் சங்கப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இராணுவமோ தாம் சட்டப்படியே இலங்கையைக் கையேற்று ள்ளதாகவும் அதற்கமையவே கட்டிங்களை இடித்து இராணுவத் தேவைக்கான நிலத்தைப் பெற்றுக்கொள் கிறோம் என்று கூறியுள்ளது.

## 'சனல் 4' ன் சலனப்படம் இராணுவம் மறுப்பு

சனல் 4 தொலைக்காட்சிச் சேவையால் அண்மையில் வெளியிடப்பட்ட இசைப் பிரியாவின் கொலை தொடர்பான காணொளியின் நம்பகத் தன்மையை

**The Sunday LEADER**

இலங்கை இராணுவம் கேள்விக்கு உள்ளாக்கியுள்ளது. இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்து வதற்காக முக்கிய நாட்களிலேயே இவ்வாறான நாட்களில் 'சனல் 4' தொலைக் காட்சியினால் வெளியிடப்பட்டுவருவதாக இலங்கையின் வங்கசூரிய தெரிவித்து ள்ளார்.

## வடமாகான முஸ்லிம்களுக்கு உதவுக

வடமாகான முஸ்லிம்மக்களின் நலனோம்பல் தொடர்பாக த.தே. கூட்டமைப்பிடம் முஸ்லிம் காங்கிரஸ் உதவி கோரியுள்ளது. தாம் வெற்றி யடைந்தால் வடமாகாண முஸ்லிம்களின் வாழ்விற்கு உதவுவோம் என தேர்தலின் போது வழங்கிய வாக்குறுதியை த.தே.கூ வடமாகாணத்தில் நிறைவேற்ற வேண்டும் என மு.காவின் பொதுச் செயலர் ஹசன்அலி தெரிவித்துள்ளார்.

## ஸெபீல்ட் காவல்துறையுடன் இலங்கை தொடர்பு

கடந்த ஞாயிறு ஸெபீல்ட் பகுதியில் கொல்லப்பட்ட இலங்கை இளைஞர் தொடர்பான விபரங்களைப் பெற்றுக் கொள்ள அப் பிரதேசக் காவல் துறையுடன் இலங்கையின் வெளிவிவகார அமைச்சு தொடர்பை ஏற்படுத்தியுள்ளது. கொல்லப்பட்ட 'தவீஸா பீரிஸ்' ஸெபீல்ட் பகுதியில் நிறுத்திவைக்கப் பட்டிருந்த அவரது மகிழுக்தில் வைத்தே அடித்துக் கொல்லப்பட்டுள்ளதாக தெரிகின்றது. பீஸாவை வழங்கும் பணியிலேயே இவர் கொல்லப் பட்டுள்ளார்.

## துடுப்பாட்டக் காரர்களை நோக்கியெறியப்படும் வரி

இலங்கையின் துடுப்பாட்ட வீரர்களால் தனிப்பட்ட விளம்பரங்களால் வருமானத்தின் மீது 10% வரி விதிக்கப் படவுள்ளது. இலங்கையின் துடுப்பாட்ட சபை விளையாட்டு வீரர்களை தேசிய மட்டத்திற்கு கொண்டு வர மிகவும் சிரமப்படுவதுடன் பெருஞ் செலவினையும் செய்கின்றது. ஆனால் தேசிய மட்டத்தை அடைந்தவுடன் வீரர்கள் பெருமளவு உழைக்கின்றார்கள். எனவே அவர்களிடம் அறவிடப்படும் வரியைக் கொண்டு இலங்கையின் விளையாட்டுத் துறையை விருத்தி செய்யமுடியும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

## பிக்குனிகள் நீதிமன்றுக்கு!

தமது தேசிய அடையாள அட்டைகளில் "பிக்குனி" என்ற சொற் பதத்திற்குப் பதிலாக "சில் மாதா"என்ற சொற்பதம் பிரயோகிக்கப்பட்டுள்ளதைக் கண்டித்து பிக்குனிகள் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்ய நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

இவ்வாறு ஆட்பதிவுத் திணைக்களம் மேற்கொண்ட தன்னிச்சையான பெயர் மாற்றத்தால் தாம் பெருமளவு நெருக்கடிகளைச் சந்தித்திருப்பதாகவும் இளம் பிக்குனிகள் பரீட்சைகளை எழுதுவதற்குத் தடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப் பட்டள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விமுரசு

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான

## பரீட்சை வழிகாட்டல்

### பாடம் - விஞ்ஞானம், 10

பகுதி 01

01. தாவரங்களின் இலிங்கமுறை இனப்பெருக்கத்தின் ஒரு கட்டத்தைப் பின்வருவனவற்றில் எது குறிக்கின்றது?
   1. வித்திலிருந்து கன்றைப் பெற்றுக்கொள்ளல்
   2. கிளையிலிருந்து கன்றைப் பெற்றுக்கொள்ளல்
   3. வேரிலிருந்து கன்றைப் பெற்றுக்கொள்ளல்
   4. இலையிலிருந்து கன்றைப் பெற்றுக்கொள்ளல்

02. ஒரு தாவரத்தின் பூவை அவதானித்த மாணவன் ஒருவன் அதனைப் பற்றிய பின்வரும் விபரங்களைக் குறித்துக் கொண்டான். அதன் அல்லிகள் நிறத்தை உடையன. கேசரங்கள் அடியிலிருந்து அமுதம் வெளியே வந்து கொண்டிருந்தது. மகரந்தக் கூடுகள் குறிக்குக் கீழே அமைந்திருந்தன. இப்பூ எக்காரணியின் மூலம் மகரந்தச் சேர்க்கை அடைவதற்கு வடிவமைந்திருக்கின்றது?
   1. பூச்சிகளின் மூலம் 2. காற்றின் மூலம்
   3. நீரின் மூலம் 4. செயற்கை முறையின் மூலம்

03. கூர்ப்பு நடைபெறும் விதத்தை விளக்குவதற்கு டாவின் எடுத்துரைத்த இயற்கைத் தேர்வுக் கொள்கையின் நான்கு படிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றின் சரியான ஒழுங்கு முறையைக் காட்டும் விடை யாது?
   அ. தக்கன பிழைத்தல் ஆ. மாறல்
   இ. மிகையுற்பத்தி ஈ. போட்டி
   1. அ, ஆ, இ, ஈ 2. ஆ, இ, அ, ஈ 3. இ, ஆ, ஈ, அ
   4. ஆ, ஈ, அ, இ

04. தெறி வினைக்காகச் சம்பந்தப்படும் நரம்புக்கலங்களினூடாகக் கணத்தாக்கங்கள் செல்லும் சரியான ஒழுங்கு முறை யாது?
   1. புலன் நரம்புக்கலம் → இயக்க நரம்புக்கலம் → இடைத்தூது நரம்புக்கலம்
   2. புலன் நரம்புக்கலம் → இடைத்தூது நரம்புக்கலம் → இயக்க நரம்புக்கலம்
   3. இடைத்தூது நரம்புக்கலம் → இயக்க நரம்புக்கலம் → புலன் நரம்புக்கலம்
   4. இடைத்தூது நரம்புக்கலம் → புலன் நரம்புக்கலம் → இயக்க நரம்புக்கலம்

05. அணு எண் 19 ஆன மூலகம் ஒன்றின் இறுதிச் சக்திப் படியில் இருக்கும் இலத்திரன்களின் எண்ணிக்கை யாது?
   1. 1 2. 9 3. 18 4. 19

*கட்டமைப்பு வினாக்கள்*

01. ஒரு இன அங்கி அடுத்த சந்ததியை உருவாக்கும் போது அவ்வங்கியின் இயல்புகள் அடுத்த சந்ததிக்குக் கடத்தப்படுவதனால் பெற்றோரின் இயல்புகளைக் கொண்ட அடுத்த சந்ததி உருவாகின்றது. இருப்பினும் உருவாகிய அடுத்த சந்ததியில் பல வேறுபாடுகள் காணப்படலாம். இவைகளுக்குப் பல்வேறு காரணங்கள் காரணமாக அமைகின்றன.

1. பாரம்பரியம் என்றால் என்ன? ..............................................
2. பரம்பரை அலகு என்றால் என்ன? ..............................................
3. பிறப்புரிமை அமைப்பு என்றால் என்ன? ..............................................
4. பரம்பரை இயல்புகள் ஊடுகடத்தப்படுவது பற்றி தெளிவான ஆய்வுகளை மேற்கொண்ட விஞ்ஞானி யார்? ..............................................
5. தூய வெள்ளையான, உயரமான பன்றிகளுக்கும் தூய, கறுப்பான, கட்டையான பன்றிகளுக்குமிடையே இனக்கலத்தல் நடைபெற்றது.
   அ. $F_1$ சந்ததியின் பெற்றோரின் பரம்பரை அலகைத் தருக?
   ஆ. $F_1$ சந்ததி எவ்வாறு இருக்கும்?
   இ. இவ் இனக்கலத்தலின் போது $F_1$, $F_2$ சந்ததிகள் ஊடுகடத்தப்படும் முறையைத் தருக.
   ஈ. $F_2$ சந்ததியின் பரம்பரை அலகைத் தருக.
   உ. தோற்ற அமைப்பு விகிதத்தை தருக.
   ஊ. பிறப்புரிமை அமைப்பு விகிதத்தைத் தருக.

02.
1. உராய்வு விசை என்றால் என்ன?
2. உராய்வு விசையின் எல்லைப் பெறுமானத்தைத் தீர்மானிக்கும் காரணிகள் இரண்டு தருக.
3. உராய்வு விசையை எவ்வாறு குறைக்கலாம்?
4. நியூற்றனின் முதலாவது விதியைத் தருக.
5. உந்தம் என்றால் என்ன?
6. $5Kg$ திணிவின் மீது $8N$ விசை பிரயோகிக்கப்பட்டால் அதனால் ஏற்படும் ஆர்முடுகல் என்ன?
7. அன்றாட ஆர்முடுகலுடன் நடைபெறும் இயக்கத்திற்கு இரண்டு உதாரணங்கள் தருக.
8. அன்றாட அமர்முடுகலுடன் நடைபெறும் இயக்கத்திற்கு இரண்டு உதாரணங்கள் தருக.

விஞ்ஞான பரீட்சை வழிகாட்டல் - ஆசிரியர் குழு
குரு கல்வி நிலையம், சாம்பல் தீவு, புளியங்குளம்.

### பாடம் - கணிதம், 10

பகுதி 02

01. பொறி ஒன்றைக் கைக்காசுக்கு விற்கும் போது விலை 90,000 ஆகும். அதனை வாடகைக் கொள்வனவு முறையில் பெறுவதாயின் முதலில் பொறியின் விலையின் அரைவாசியைச் செலுத்தியும் மீதியை 4,250 வீதம் 24 மாதம் தவயைகளில் செலுத்தியும் வாங்கலாம். இதன்படி,
   1. தவணைமுறையில் செலுத்துவதற்கு எஞ்சிய கடன் பணம் யாது?
   2. 24 மாதத் தவணைகளிலும் செலுத்தும் மொத்தப்பணம் யாது?
   3. செலுத்தப்படும் மொத்த வட்டி யாது?
   4. மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?
   5. ஒரு மாத அலகு வட்டி எவ்வளவு?
   6. வட்டியின்றி ஒரு தவணைப்பணம் எவ்வளவு?
   7. செலுத்தப்படும் ஆண்டு வட்டி வீதம் யாது?

02. மோட்டார் வண்டி ஒன்று $150\,Km$ தூரத்தை மாறாக்கதி $VKmh^{-1}$ செல்கின்றது. கதி மணித்தியாலத்திற்கு $20\,Km$ ஆல் குறைந்தால் அப்பிரயாண நேரம் 2 மணித்தியாலத்தினால் அதிகரிக்கின்றது. இந்தத் தகவல்களைப் பயன்படுத்தி இருபடிச்சமன்பாடு ஒன்றை உருவாக்கி புகைவண்டியின் மாறாக்கதியைக் காண்க.


03. 1. சுருக்குக. $\left[\frac{32}{162}\right]^{\frac{1}{4}} \times \frac{1}{9^{-\frac{1}{2}}}$

   2. $\lg\left[\frac{8}{125}\right] + \lg 25 - 3\lg\left(\frac{2}{5}\right) + \lg 4$ இன் பெறுமதியை மடக்கை அட்டவணையை பயன்படுத்தாமல் காண்க.

   3. மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தி 3 தசம தானத்திற்கு பெறுமதி காண்க. $\frac{0.071 \times \sqrt{48.5}}{(12.7)^2}$

04. 1) உருளை வடிவான சீரான உலோகக் குற்றியொன்றின் விட்டம் $21\,cm$ ஆகும். உயரம் $12\,cm$ எனின்
   1. இங்கு $\pi = 3.14$ எனக் கொண்டு அடியின் பரப்பளவைக் கிட்டிய முழு எண்ணிற்கு காண்க. (மடக்கையைப் பயன்படுத்துக.)
   2. உலோகக் குற்றியின் கனவளவை (1) இல் பெற்ற இறுதி விடையைப் பயன்படுத்தி காண்க.

2) $1366\,cm^3$ கனவளவுள்ள உலோகத் துண்டொன்று உருவாக்கப்பட்டு $2\,cm$ விட்டமுடைய கோளங்கள் செய்யப்பட்டன. உருக்கி வார்த்தலின் போது $110\,cm^3$ உலோகம் வீணாகியது எனக் கொண்டு ஆக்கப்பட்ட கோளங்களின் எண்ணிக்கையைக் காண்க. ($\pi = 3.14$)

05. 


கிழக்கு மேற்காக அமைந்துள்ள நேர்பாதை ஒன்றில் செல்லும் ஒருவனுக்கு $P$ என்னும் புள்ளியிலிருந்து நோக்கும் போது $C$ என்னும் நிலைக்குத்தான தென்னை மரம் ஒன்றின் திசைகோள் $108^\circ$ ஆகும். அவர் $P$ யிலிருந்து $140m$ தூரம் கிழக்கு நோக்கிச் சென்று நோக்கும் போது தென்னை மரத்தின் திசைகோள் $132^\circ$ எனக் காணப்பட்டது.
   1. உருவைப் பிரதி செய்து பூரணப்படுத்தி மேற்கண்ட தரவுகளை அதிற் குறிக்க.
   2. பாதையிலிருந்து தென்னை மரத்திற்குள்ள மிகக் கிட்டிய தூரத்தைக் காண்க.
   3. $P$ யிலிருந்து தென்னை மரத்துக்குள்ள தூரத்தைக் காண்க.

06. நேர்விளிம்பு, கவராயம் அளவுகோல் ஆகியவற்றை மாத்திரம் பயன்படுத்தி அமைப்புக் கோடுகள் யாவற்றையும் தெளிவாகக் காட்டுக.
1. $AB = 8cm$, $AD = 5.5cm$, $D\hat{A}B = 60^\circ$, $AB // DC$, $DC = 6cm$ ஆகவுள்ள சரிவகம் $ABCD$ ஐ அமைக்க. பருமட்டிப் படம் அமைத்துக் கொள்க.
2. $A\hat{C}D$ யை அளந்தெழுதுக.
3. $B, C$ ஆகிய புள்ளிகளிலிருந்து சமதூரத்தில் செல்லும் புள்ளியின் ஒழுக்கை அமைக்க.
4. புள்ளி $C$ யில் $CD$ க்கு செங்குத்து அமைக்க
5. $B, C$ ஆகியவற்றில் சமதூரத்திலிருந்து செல்லும் புள்ளியின் ஒழுக்கும் $C$ யில் அமைத்த செங்குத்தும் சந்திக்கும் புள்ளியை $E$ எனக் குறிக்க.
6. $E$ ஐ மையமாகவும் $CE$ ஐ ஆரையாகவும் கொண்ட வட்டத்தை அமைக்க.
7. வட்டத்தின் ஆரையை அளந்து எழுதுக

#### விடைகள்

01) a) i) 5/12
    ii) 9000/=
    iv) மூட்டற்ற தொடை
    v) 10 பேர்
  b) (x-3+y) (x-3-y)

02) a) விற்றவிலை ரூபா 585.00
  b) வாங்கிய விலை ரூ 550.00

03) i) 18 பேர்
  ii) 7பேர்
  iii) 


4) a) i) 1/2 (10+x) =11.5
  $10x+x^2=23$
  $x^2+10x-23=0$
  ii) x= 1.9 or x= -11.9

5) i) 3x2
  ii) B= $\begin{pmatrix} 2 & -5 \\ -1 & 8 \\ 6 & -12 \end{pmatrix}$

கணிதம் வழிகாட்டல் -
திருமலையின் பிரபல ஆசிரியர் T.குமணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

பயிற்சி 11 | பாடம் - வரலாறு

01. கண்டி இராசதானி கீழ் போர்த்துக்கேயரால் முன்னெடுக்கப்பட்ட போர்களை தலைமை ஏற்ற தளபதிகளின் சரியான ஒழுங்கு

| | |
|---|---|
| 1. தந்துரே | A தியோகுத மெலோ |
| 2. பலன | B பேரோலோபேஸ் த டீசூஸா |
| 3. ரந்தெனிவெல | C கொன்ஸ்தாந்தின் டீசூஸா |
| 4. கண்ணொருவ | D தொன் ஜெரணிமோ அஸவேது |

1. ACDB 2.BDCA 3.BDAC 4.ABDC

02. அலைச் செயற்பாடு காரணமாக குளக்கட்டின் அரிப்பைத் தடுக்கும் குளத்தின் பகுதி
   1. கலிங்கற்தொட்டி 2. சுருங்கை 3. அலைதாங்கி4. கலிங்கல்
03. பிரான்ஸிய புரட்சியை முன்னெடுத்த எழுத்தாளர்
   1. வோல்டயர் 2. கரிபால்டி 3. இராஸ்மஸ் 4. தாந்தே
04.

| | |
|---|---|
| 1. இலக்கியத்தின் தந்தை | A தாந்தே |
| 2. மானிடவியலின் தந்தை | B பிரான்ஸிஸ்பேர்கன் |
| 3. ஆங்கில இலக்கியத்தின் தந்தை | C பெட்ராக் |
| 4. வானியல் விஞ்ஞானத்தின் தந்தை | D நிக்கலஸ் கொபனிகஸ் |

1. ABCD 2.ACBD 3.BCDA 4.BDCA

05. இலங்கையினல் ஆங்கிலேயர் ஆட்சினால் ஏற்பட்ட விளைவு அல்லாதது
   1. பெருந்தோட்டபயிர்ச் செய்கை அறிமுகம்
   2. ஏற்றுமதி இறக்குமதி பொருளாதார கோலம் உருவாக்கம்
   3. மத்தியதர வர்த்தகம் உருவாக்கம்
   4. பரிஷ பாடசாலை(கோவில்பற்று)தோற்றம்
06. இந்திய சுகந்திர போராட்டத்தில் பஞ்சாப் சிங்கம் என வர்ணிக்கப்படும் தேசிய வீரர்
   1. லாலா லஜ்பதிராய் 2. தாதாபாய் நபுரோஜி
   3. பாலகங்காதரதிலகர் 4. சுபாஸ் சந்திரபோஸ்
07. இந்தியாவில் முஸ்லீம்களுக்கு தனிநாடு வேண்டும் என முதன்முதலில் பாடிய கவிஞன்
   1. அல்லாமா இக்பால் 2. M.C. சித்திலெப்பை
   3. தாதாபாஸ் நபுரோஜி 4. அலி ஜின்னா
08. இனவாதி பிரதி நிதித்துவம் அறிமுகம், கட்டாய இராஜகாரிய முறை ஒழிப்பு, அரசு வர்த்த ஏகபோக உரிமை நீக்கல்.
   மேற்படி விடயங்களுடன் தொடர்புடைய யாப்பு
   1.டொனமூர் 2.கோல்புறூக் கமரன் 3.மனிங் 4.சோல்பரி
09. கொழும்பை மையமாகக் கொண்டு செயற்பட்ட மிஸனரி இயக்கம்
   1.பட்டிஸ்ட் 2.வெஸ்லியன் 3.அமெரிக்கன் 4.லண்டன்
10. பின்வரும் கண்டு பிடிப்பாளர்களின் தொகுதியில் பொருத்தமற்ற கூற்று
   1. மோட்டார் வாகனம்- டெம்லர்
   2. ஆகாய விமானம்-றைட்சகோதரர்கள்
   3. பாதுகாப்பு விளக்கு-ஜோர்ஜ் ஸ்ரீவன்கன்
   4. நீராவி கப்பல்-றொபர்ட் புல்டன்
11. 1818 ஆம் ஆண்டு கிளர்ச்சியை முன்னெடுத்த தலைவர் அல்லாதவர்
   1. ஹெப்பட்டிப்பொல 2. மடுகல்ல 3. வீரபுரன் அப்பு
   4. 2ம் பிலிமத்தலாவ
12. சரசவிசந்தரெஸ, த புடிஸ்ட் என்ற பத்திரிகையின் ஆசிரியர்
   1. ஹென்றி ஸ்ரீல் ஒல்கொட் 2. அநகாரிக தர்மபால
   3. டி.பி ஜாயா 4. M.C சித்திலெப்பை
13. 1 ஆம் உலகமகாயுத்த காலத்தில் மத்திய ஐரோப்பிய நாடுகளின் நட்பு கூட்டு அணியில் இணைந்து கொண்டு பின் பிரிந்து சென்று முக்கூட்டு நட்பு அணியில் இணைந்து கொண்ட நாடு
   1. சிரியா 2. ஜேர்மனி 3. ஆஸ்திரியா 4. பிரான்ஸ்
14. 1 ஆம் உலகமகாயுத்த கால முடிவில் உலக சமாதானத்தை நிலைநாட்ட உருவாக்கப்பட்ட சர்வதேச சங்கத்தை தோற்றுவிக்க முன்னின்ற தலைவர்
   1. தியோடர் ரூஸ்வெல்ட் 2. பிராங்ளின் ரூஸ்வெல்ட்
   3. ஜோசப் ஸ்டாலின் 4. வூட் ரோ வில்சன்
15. சீனா முதலாளித்துவ பாதையில் செல்வதை தடுக்க மாவே சேதுங் முன்னெடுத்த செயல்திட்டம்
   1. முன்னோக்கிய பெரும் பாய்ச்சல் 2. நீண்ட நடைப் பயணம்
   3. கலாசாரப்புரட்சி 4. கோமின்டாங் படை அமைப்பு
16. டொகுகாவா சோகுன்களின் ஆட்சி முடிவுக்கு காரணமாக அமைந்த பிரதான விடயம்
   1. கோகுன்களின் ஆடம்பர வாழ்வு 2. படைப்பலம் பலவீனம்
   3. அமெரிக்காவுடனான வர்த்தக உடன்படிக்கை
   4. சத்சுமா மீதான பிரித்தானிய குண்டு வீச்சு
17. ஐக்கிய நாடுகளின் சமையில் நிரந்தர உறுப்புகள் நாடுகளின் தொகை
   1. 5 2. 15 3. 193 4. 10
18. இரண்டாம் உலகமகா யுத்தத்தில் "அச்சு நாடுகளின்" கூட்டணி
   1. சிரியா, யப்பான், ஜேர்மனி 2. பிரான்ஸ் யப்பான், ஜேர்மனி
   2. சிரியா, இற்றாலி, ஜேர்மனி 4. இத்தாலி, யப்பான், ஜேர்மனி
19. இந்தியாவில் ஆரியர்முதலில் குடியேறியபிரதேசம்
   1. சிந்து 2. கங்கை 3. ஆப்கானிஸ்தான் 4. தக்கிணம்
20. மகதத்தை ஆண்ட முதல் மன்னன்
   1. அஜாசத்துரு 2. காலாசோகன் 3. பிம்பிசாரன் 4. பிந்துசாரன்

ஆசிரியர் :
த. அகிலன், Dip. in Tech. (Merit)
புனித மரியாள் கல்லூரி, திருகோணமலை
வெற்றிப்படி ஆசிரியர், ஆறுதல் நிறுவன வரலாற்றுப் பாட ஆசிரியர்

# ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் - 05

பிரதீபா

1. பொதி செய்யப்பட்ட உணவு வகை, மருந்து வகை அடங்கிய பொதியினுள்ளே, வளியிலுள்ள நீராவியை உறிஞ்சுவதற்காக இடப்பட்டிருக்கும் சிறு பைக்கட்டினுள் காணப்படும் பதார்த்தம் எது?
   1. சிலிக்கா ஜெல் 2. நீராவி உறிஞ்சி 3. சுண்ணாம்பு
2. இடி மின்னலுடன் மழை பெய்யும் போது, பாதுகாப்புக்காக பின்பற்ற வேண்டிய நடவடிக்கை எது?
   1. வீட்டினுள்ளே இருத்தல் 2. மின் சாதனங்களின் பாவனையை தவிர்த்தல் 3. குளம், நீச்சல் தடாகம் என்பவற்றில் நீந்துதல்
3. நீண்ட நாட்கள் வாடாத, வாசனையற்ற பூ பின்வருவனவற்றுள் எது?
   1. கொடி மல்லிகை 2. செவ்வந்திப் பூ 3. கடதாசிப்பூ
4. 19 3 8 15 15 12 எனும் ஆங்கில எழுத்துக்களைக் கொண்டு ஆக்கக்கூடிய ஆங்கிலச் சொல் எது?
   1. School 2. Spoon 3. Front
5. பாபு சதுவின் தந்தையாவார். குமார் பாபுவின் அண்ணாவார். பவானி சதுவின் தங்கையாவார். பவானியும் குமாரும் சந்திக்கும் போது பவானி என்ன முறையைக் கொண்டு குமாரை அழைப்பாள்?
   1. சித்தப்பா 2. பெரியப்பா 3. மாமா
6. எலுமிச்சையின் இளையது கன்று என்பது போல தென்னையின் இளையது?
   2. பிள்ளை 2. குட்டி 3. கன்று
7. ஆதிகால மக்கள் இறைச்சியை நீண்ட நாட்கள் பேணிப் பாதுகாத்த முறைகளில் ஒன்று?
   1. குளிரூட்டியில் வைத்தல் 2. தேனில் இடல்
   3. மண்ணினுள் புதைத்து வைத்தல்
8. பிற்பகல் இரண்டு கழிந்து ஐம்பத்தொரு நிமிடம் என்பதை சரியாக நியமவடிவில் குறிப்பது எது?
   1. 14:51 2. 14.51 3. 02:51
9. நாற்றுமேடை அமைத்து புதிய தாவரத்தைப் பெறுபவர். கழுவிய பின்னரே சமைப்பதற்கு வெட்டுவர். செடியில் காய்க்கும் காயாகும். இக்கூற்றுக்களுக்குப் பொருத்தமான காய் எது?
   1. பீற்ருட் 2. தக்காளி 3. வெண்டி
10. "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்பதன் பொருளைக் கூறுவது எது?
   1. உணவிற்கு உப்பினை அதிகமாகப் போட்டவரை மறக்கக்கூடாது. 2. நன்றி மறத்தல் கூடாது.
   3. உப்பில்லாமல் சாப்பிடமுடியாது
11. 12ம் வினாக்களுக்கு கீழேயுள்ள தகவல்களை வாசித்து விடையளிக்குக.

50 மீற்றர் நடைப்போட்டி ஒன்றில் 6 மாணவர்கள் தமது போட்டியினை நிறைவு
செய்த காலம் கீழே தரப்பட்டுள்ளது.

| சஞ்சு | டோலி | அம்மு | ஞானன் | ஸ்ரீவரன் | அமுதன் |
|---|---|---|---|---|---|
| 21.15 | 24.5 | 20.5 | 21 | 21.15 | 22.05 |

11. இப்போட்டியில் முதலாம் மற்றும் கடைசி இடங்களைப்பெற்றவர்கள் முறையே
   1. டோலி, அம்மு 2. அம்மு, அஞ்சுதன் 3. அம்மு, டோலி
12. இவ்வீரர்களின் போட்டி முடிவுகளை பின்னிருந்து எழுதியிருப்பின் சரியான விடை
   1. அம்மு, அமுதன், டோலி, சஞ்சு, அமுதன், ஞானன்
   2. டோலி, அமுதன், சஞ்சு, ஸ்ரீவரன், ஞானன், அம்மு
   3. அம்மு, ஞானன், ஸ்ரீவரன், சஞ்சு, அமுதன், டோலி
13. குரங்கு - அலப்பும் என்பது போல எருமை ....................
   1. கத்தும் 2. முக்காரமிடும் 3. எக்காரமிடும்.
14. தோட்டத்தில் உள்ள தாவரம் ஒன்றை ஒளிபுகாத ஒரு பாத்திரத்தில் மூடி ஒரு வாரத்தின் பின் பாத்திரத்தை அகற்றி தாவரத்தை அவதானித்த போது தாவரத்தில் ஏற்பட்ட மாற்றம் யாது?
   1. தாவர இலைகள் வெளுறிக் காணப்படும்
   2. தாவரம் இறந்துவிடும்
   3. தாவர இலைகள் செழிப்பாகக் காணப்படும்.
15. எல்லா முலையூட்டிகளுக்கும் பொதுவான இயல்பு
   1. குட்டியீனுதல் 2. பாலூட்டுதல் 3. நிலத்தில் வாழ்தல்

பெயர்: ..........................................................................
..........................................................................
முகவரி: ..........................................................................
..........................................................................
..........................................................................
பாடசாலை: ..........................................................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# புறம் ஒரு விஷம் (தொடர்ச்சி)

நான் கூறுவது என்னுடைய சகோதரனிடம் இருந்தாலுமா? எனக் கேட்கப்பட்டது. அதற்கு நபி அவர்கள் நீர் கூறுவது அவரிடம் இருந்தால் நீர் அவரைப்பற்றி புறம் பேசிவிட்டாய் நீர் கூறுவது அவரிடத்தில் இல்லையெனில் நீர் அவரைப் பற்றி அவதூறு கூறிவிட்டாய் எனக் கூறினார்கள்.

மேற்படி நபி மொழியைக் கவனமாக சிந்தித்துப் பார்க்கும் போது பல விடயங்களை அதிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். முதலில் புறம் என்றால் ஒரு முஸ்லிம் பிற முஸ்லிமைப் பற்றி அவன் விரும்பாததைக் கூறுவதாகும் என்பதை விளக்குகின்றது.

அவனோடு தொடர்புடைய எக்காரியமாக இருந்தாலும் சரிதான் அவனுடைய உடல் அமைப்பு, குண நலன்கள், அங்க அசைவுகள், பண்பாடு, பழக்கவழக்கம், நாகரீகம் அவன் அணியும் ஆடை அணிகலன்கள் பயன்படுத்தும் பொருட்கள் அவனுடைய மனைவி, மக்கள், பெற்றோர்கள், சகோதர சகோதரிகள், மாணவர்கள், அவன் பிறந்த நாடு, வளர்ந்த வீடு அவன் வசிக்கும் கிராமம் அவன் பேசும் மொழி அவன் செய்யும் தொழில் அவனுடைய குலம் கோத்திரம் மார்க்க நடத்தை என எது குறித்துப் பேசினாலும் சரிதான் இதுவும் புறம்தான்.

இன்னும் ஒருவனைப் பார்த்து அவன் மாபெரும்கஞ்சன்அவன் ஒல்லியானவன், வாய் திறந்து பேசமாட்டான், அவன் உண்டால் வாரி வளித்து மூக்கு முட்ட விழுங்கி விடுவான் படுத்தால் பூகம்பம் வந்தால் கூட விழித்தொழ மாட்டான் அதிகம் பேசமாட்டான் என்று கூட ஒருவரை குறித்து அவனுக்கு விருபமில்லாவற்றைக் கூறுவதும் புறம் பேசுதலாகும். அதே போன்றுதான் ஒருவன் செய்யும் தொழிலை மையமாக வைத்து காரணப் பெயர்களைச் சூட்டி பிறரிடம் அவனைப்பற்றிக் கேலியாக பேசுவதும் ஹறாமாகும்.

புறம் இஸ்லாத்தின் செத்த பிணத்தைப் புசிப்பதை விடவும் அருவருக்கத்தக்க இச்செயலாக கருதப்ப டுகின்றது. "நம்பிக்கை கொண்டேரே! ஊகங்களில் அதிகமானதை விட்டு விலகிக் கொள்ளுங்கள். நிச்சயமாக சில ஊகங்கள் பாவமாகும். (பிறரின் குறைகளைத்) துருவித் துருவி ஆராயாதீர்கள். உங்களில் ஒருவர் மற்றவரைப் புறம் பேச வேண்டாம். உங்களில் எவரேனும் இறந்த தமது சகோதரரின் மாமிசத்தைச் சாப்பிட விரும்புவாரா? அதை வெறுப்பீர்கள் அல்லவா? எனவே அல்லாஹ்வை அதிகம் அஞ்சுங்கள் நிச்சயமாக இறைவன் மன்னிப்பை ஏற்பவன் நிகரற்ற அன்புடையோன்

மேற்படி திருமறை வசனத்தில் இறைவன் இறை நம்பிக்கையாளர்களை முன்னிலைப் படுத்த நான்கு கட்டளைகளைப்பப் பிறப்பிக்கின்றான்.

1. தவறான எண்ணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்
2. பிறரின் குறைகளைத்துருவி ஆராயாதீர்கள்
3. நீங்கள் ஒருவருக்கொருவர் புறம் பேசாதீர்கள்
4. இறைவனை அதிகம் அஞ்சிக் கொள்ளுங்கள்



திருமதி சப்றா
ஆசிரியர்.நெய்தல் நகர்,மூதூர்

தொடரும்..........



# வெளிநாட்டு மோகம்

நீண்ட காலம் பிரிந்திருப்பதன் மூலம் திருமணத்தின் நோக்கம் வீணடிக்கப்படுகிறது. மனைவிக்குச் செய்ய வேண்டிய சகல கடமைகளும் துண்டிக்கப்படுகிறது. பிள்ளைகளுக்கு செய்ய வேண்டிய கடமைகள் புறக்கணிக்கப்படுகிறது. ஏனைய தமது குடும் அங்கத்தவர்கள் மற்றும் உறவி னர்களுக்கு செய்ய வேண்டிய சகல கடமைகளும் மீறப்படுகிறது. இப்படி ஒரே பார்வையில் தேடினால் நீண்டகாலம் தனது குடும்பத்தை விட்டு பிரிந்திருப்பதை இஸ்லாம் வன்மையாக கண்டிக்கிறது.

ஸல்மான் பாரிஸ் ரழி அவர்கள் தனது சகோதரரான அபூதர்தா ரழி அவர்களுக்கு உன் கண்களுக்குச் செய்ய வேண்டிய கடமை உள்ளது. உமது உடம்புக்குச் செய்ய வேண்டிய கடமை உள்ளது. உமது மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமை உள்ளது. என்று சில உபதேசங்களைக் கூறினார்கள். இந்த உபதேசத்தை நபி அவர்களும் அங்கீகரித்த செய்தியை ஹதீஸ்களில் நாம் பார்க்கலாம்.

அது போல் சில நபித் தோழர்கள் நான் திருமணம் முடிக்க மாட்டேன். நான் இரவு முழுவதும் நின்று வணங்கப்போகிறேன் என்று கூறிய போது. அதையும் தடை செய்த செய்திகளை ஹதீஸ்களில் காணலாம். எனவே இதனுடைய முக்கிய நோக்கம் என்ன? குடும்பத்தோடு உறவுகளோடு மக்களோடு சேர்ந்து வாழ வேண்டும் என்கிற தத்துவத்தை இஸ்லாம் சொல்லித் தருகிறது. எனவே குடும்பத்தைப் பிரிந்து நீண்டகாலம் கணவன் வாழ்வதை இஸ்லாம் தடை செய்கிறது.

ஆண்கள் வெளிநாட்டிற்குச் செல்வதற்கு பெண்கள் முக்கிய காரணங்களாக அமைகிறார்கள். பக்கத்து வீட்டுகாரரர் வீடு கட்டுகிறார். அவர் வாகனம் வாங்கி விட்டார். அவர் சொந்தக் கடை ஆரம்பித்து விட்டார். என்று கணவரோடு அடிக்கடி பிரச்சனை போடுவதால் இங்கிருந்து மனைவியோடு சண்டை பிடித்துக் கொண்டிருப்பதை விட வெளிநாட்டில் நிம்மதியாக இருக்கலாம் என்றடிப்படையில் சிலர் பறக்கிறார்கள். இன்னும் சிலர் நம் நாட்டில் சம்பாதிக்க முடியாது என்ற பெயரில் வெளிநாட்டிற்கு பறக்கிறார்கள். இன்னும் சிலர் எல்லோரும் போகிறார்கள் என்ற பெயரில் பறக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு காரணத்திற்காக பறந்தாலும் அன்பு, பாசம் உறவுகள் பிரிக்கப்படுவதை மறந்து விடுவார்கள் மனைவி பிள்ளையை விட பணத்தின் மீது ஏற்பட்ட மோகத்தின் விளைவு தான் இப்படியான பிரிவுகள்.

சிலர் ஒரு மாதம் அல்லது இருமாத விடுமுறையின் தன் நாட்டிற்கு வந்தாலும் அடுத்து என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டால் நான் மீண்டும் வெளிநாட்டிற்கு சென்று விடுவேன் என்பதே இவர்களின் பதிலாக உள்ளது. அப்பிடியானால் மனைவிக்கு செய்ய வேண்டிய கடமைகளை எப்போது நிறை வேற்றப் போகிறீர்கள்? சிலர் திருமணம் முடித்து ஒரு கிழமையில் இன்னும் சிலர் திருமணம் முடித்து ஒரு மாதத்திலும் பறப்பதை நாம் காணலாம். பணம் என்பது இன்று வரும் நாளை போய்விடும். ஆனால் இளமை என்பது வாழ்நாளில் ஒரு முறைதான் வரும் அதனை மீண்டும் பெற முடியாது. அப்படியானால் ஏன் திருமணத்தை முடித்து விட்டு மனைவியை தனியே தவிக்க வைக்க வேண்டும். மறுமையில் அல்லாவிடம் என்ன பதில் சொல்லப் போகிறீர்கள். சிலர் வெளிநாடே கதி என்று இருக்கிறார்கள். சில இடங்களில் நீண்டகாலம் கணவனை விட்டு பிரிந்திருப்பதால் சிலர் தவறான தொடர்புகளை ஏற்படுத்தி வாழ்க்கைகை இருண்டதாக அமைத்துக் கொள்கிறார்கள்.

தொடரும்..........






# பரு சிகிச்சை முறை

நன்கு கொதித்த நீரில் 5நிமிடம் ஆவிப்பிடிக்க அவ் நீரினுள் 1பிடி வேப்பில்லை போட்டு 2நிமிடம் ஆவிபிடிக்க மீண்டும் அதே நீரினுள் 1பிடி துளசி இலை போட்டு 2நிமிடம் ஆவிப்பிடிக்க மீண்டும் அதே நீரினுள் 1மே க.கஸ்தூரி மஞ்சள் போட்டு ஆவிபிடிப்பது பரு சிகிச்சை முறையாகும்.



# முகச் சுருக்க சிகிச்சை

அடிப்படை Facial Massage படிமுறைகள் முடித்தபின் முட்டை வென்கருவை அடித்து முகம் முழுவதும் பரவலாக பூசி நன்கு காயவிட்டு ஈரஸ்பொஞ்சால் துடைக்குக பின்பு Oat milh cream எடுத்து Brush ஆல் முகம் முழுவதும் பூசி 15 நிமிடம் விட்டு துடைத்து குளிர் நீரால் கழுவுக.

# பக் Pack

## சாதாரண சருமம் (Normal skin)



முல்தானி மட்டிப் பவுடர் 1மே.க எடுத்து தேவையான அளவு பால்/ ரோஸ் வோட்டர் விட்டு கூழைப்பதமாகக்கரைத்து Facial ஆல் பூசி 20 நிமிடத்தின் பின் குளிர் நீரால் கழுவுக.

## எண்ணெய் சருமம் (Oil shin)



நீம் பவுடர் 1மே.க எடுத்து ரோஸ் வோட்டர் விட்டுக் கரைத்து Facial Brush ஆல் பூசி 20 நிமிடத்தின் பின் குளிர் நீரால் கழுவுக.

## உலர்ந்த சருமம் (Dryskin)



துளசி பவுடர் 1மே.க எடுத்து பால் விட்டு கூழ் பதமாக கரைத்து பூசி 20 நிமிடத்தின் பின் குளிர் நீரால் கழுவுக.

## உலர்ந்த எண்ணெய் சருமம் (Oil Dry skin)

பதினாப் பவுடர் 1மே.க எடுத்து பால் விட்டு கூழ்ப்பதமாக கரைத்து Facial Brush ஆல் பூசி 20 நிமிடத்தின் பின் குளிர்நீரால் கழுவுக.

## எண்ணெய் சருமம் (Oil skin)



கடலைமா - 1மே.க
சந்தனப்பவுடர் (சாண்டில்வூட் பவுடர்) - 1மே.க
தேசிப்புளி - பாதி
தேன் 1 மே.க ரோஸ் வோட்டர் - தேவையான அளவு

கடலைமா, சாண்டில் வூட்பவுடர் என்பன கலந்து தேசிப்புளி, தேன் சேர்த்து றோஸ்வோட்டர் அளவிற்கு விட்டு கூழ்ப்பதமாக கரைத்து Facial Brush ஆல் பூசி 20 நிமிடத்தின் பின் வெதுவெதுப்பான நீரால் கழுவுக.

***Athizsha Beauty Parloor***
***T.Shamila***

# அழகுக் குறிப்புக்கள்

சிலருக்குக் கண்களுக்குக் கீழ், இரண்டு கன்னப் பகுதியிலும் கருமை படர்ந்து திட்டுத் திட்டாக இருக்கும். இது முக அழகை கெடுத்து விடும். அந்தக் கருமையை விரட்டியடிக்க ஒரு டிப்ஸ்... வேப்பங் கொழுந்து சிறிதளவு, ஆரஞ்சு தோல் விழுது, கஸ்தூரி மஞ்சள் சம அளவு எடுத்து கலந்து, எங்கெல்லாம் கருமை படர்ந்து உள்ளதோ அங்கெல்லாம் பூசி 5 நிமிடம் கழித்து முகத்தை கழுவ வேண்டும். இவ்வாறு வாரம் இருமுறை செய்து வர கருமை ஓடிவிடும்.கரு வளையம் போக கண்களைச் சுற்றி பாதாம் ஆயில் தேய்த்தால் கரு வளையம் படிப்படியாக மறையும். வெதுவெதுப்பான நீரில் கால்களை பதினைந்து நிமிடம் வைக்கவும். இவ்வாறு செய்து வந்தால் பாதங்கள் பொலிவு பெறும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இலங்கை மீது சர்வதேச விசாரணை தேவைப்படலாம் - பிரித்தானியப் பிரதமர்



இலங்கை தொடர்பில் சர்வதேச ரீதியான விசாரணைகள் அவசியப்படலாம் என பிரித்தானிய பிரதமர் டேவிட் கம்ரூன் தெரிவித்துள்ளார். உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகள் அமுல்படுத்தல் மற்றும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடாத்தல் போன்றனவற்றை இலங்கை அரசாங்கம் உரிய முறையில் மேற்கொள்ளத் தவறினால், சர்வதேச ரீதியான தலையீட்டை மேற்கொள்ள நேரிடலாம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பிரித்தானிய தமிழர் பிரதிநிதிகளை சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மாற்றத்தை தாம் எதிர்பார்ப்பதாகவும், அமர்வுகளை புறக்கணிப்பதன் மூலம் எந்த நோக்கத்தையும் நிறைவேற்றிக் கொள்ள முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டின் மனித உரிமை விவகாரங்கள் மற்றும் ஏனைய விடயங்களில் போதியளவு மாற்றங்கள் முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதனை உலகிற்கு எடுத்துரைக்க பொதுநலவாய நாடுகள் தலைவலர்கள் அமர்வுகளை சந்தர்ப்பமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். அமர்வுகளை வெறுமனே புறக்கணிப்பது உசிதமாகாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கையின் மாற்றங்களை ஏற்படுத்துவது குறித்து இலங்கை அரசாங்கத்துடன் யதார்த்தமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார். யுத்தக் குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்த உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். பேச்சுவார்த்தைகள் இலகுவானதாக அமையாது என்ற போதிலும், புறக்கணிப்பது இராஜதந்திர அணுகுமுறையல்ல என அவர் தெரிவித்துள்ளார்.

## யானையின் தாக்குதலுக்கு இலக்கான கொமரங்கடவல விவசாயிகள்



சாலையில் சென்று கொண்டிருந்த ஒருவர் யானையால் தாக்கப்பட்டு விலா எலும்பு முறிந்த நிலையில் திருகோமலை தளவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாக்கப்பட்ட நபர் கோமரங்கடவெல பிரதேச புலிகந்தகுளம் கிராமசேவகர் பிரிவுக்கு உட்பட்டவர் என தெரியவந்துள்ளது. புலிகந்தகுளம் கிராமத்தைச் சேர்ந்த சிரிவர்த்தனகே தர்மதாச (வயது64) என்பவரே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். அவர் கூறுகையில் தான் 07.11.2013 அன்று 3.30 மணியளவில் குருளியன்குளம் பகுதியில் இருந்து தனது வீடு நோக்கி செல்லும் வழியில் குறுக்கிட்ட யானை தன்னை வழிமறித்து தனது துதிக்கையினால் பலமாக தாக்கியதாகவும், தன்னை இடுப்பு பகுதியில் தாக்கியதால் தனது விலா எலும்பு முறிவடைந்து விட்டது என்றும் ஆள்நடமாட்டம் இல்லாத பகுதி என்பதால் உதவிக்கு யாரும் இல்லாததால் சுமார் 1 மணிநேரம் தான் அவ்விடத்திலேயே இருந்ததாகவும் அவ்வழியே வந்த உந்துருளியில் வந்த நபர் ஒருவர் தன்னை முச்சக்கர வண்டி ஒன்றை வரவழைத்து அதில் தன்னை ஏற்றி 4.45மணியளவில் கோமரங்கட வெல மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மாலை 7.00 மணியளவில் திருகோணமலை தள வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் மலைமுரசிற்கு தெரிவித்தார்.

## மனநிலைப் பாதிப்பில் கிராமசேவை அலுவலர்

திருகோணமலை பிரதேசச் செயலாளர் பிரிவிற்குட்பட்ட பெண் கிராம சேவை அலுவலர் ஒருவர் திடீரென மன நலப் பாதிப்பிற்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மனஅழுத்தம் காரணமாகவே இவர் அந் நிலைமைக்குத் தள்ளப்பட்டதாக அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

அவரது அலுவலக சகபாடிகளான ஏனைய கிராமசேவை உத்தியோகத்தர்கள் எவருமே அவரை வந்து பார்த்து நல விசாரிப்பினை தற்போதுவரை மேற்கொள்ளவில்லை என்றும் அவர்கள் குறைப்பட்டுக் கொண்டனர்.

## புனித மரியாள் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா



திருகோணமலை புனித மரியாள் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா 07.11.2013 வியாழக்கிழமை மாலை 2.00 மணிக்கு கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதற்கு பேராளராக திருகோணமலை ஆயர் கலாநிதி கிங்ஸிலி சுவாமிபிள்ளை அவர்களும்,



பிரதம விருந்தினராக தமிழ்ப் பாடசாலைகளின் அபிவிருத்திக் கல்விப் பணிப்பாளரும், இசுறுபாய கல்வி அமைச்சின் ஜனாதிபதி பிரதிநிதியுமாகிய திரு.S. முரளிதரன் அவர்களும், கௌரவ விருந்தினராக திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.N.விஜேந்திரன் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக மாகாண திட்ட முகாமையாளர் திரு.K. கலாநிதி அவர்களும், சிறியோர் குருக்கள் மடத் தலைவர் அருட்தந்தை S.சுகுணேந்திரன் குரூஸ் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். (ஜெய்)



இந்நிகழ்விலே பாடசாலை ஆண்டு மலர் வெளியிடப்பட்டதுடன், மேற்பிரிவு மாணவிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வும் கல்லூரி அதிபர் அருட்சகோதரி M. நிரோஷா அவர்களின் தலைமையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## பாரதிபுரத்தில் உலக சமாதானமும் அபிவிருத்தியும் தின நிகழ்வுகள்

எதிர்வரும் 10ம் திகதி மூதூர் பாரதிபுரத்தில் உலக சமாதானம் மற்றும் அபிவிருத்தி தின நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பாரதிபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும் மூதூர் இந்துக் குருமார் சங்கத் தலைவருமான சிவஸ்ரீ இ.பாஸ்கரன் குருக்கள் அவர்கள் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

சமாதானத்தின் மூலமாகவே கிராமங்களை அபிவிருத்தி செய்யமுடியும் என்பதை வலியுறுத்தியே இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், அதனை பாரதிபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம், மூதூர் இந்துக் குருமார் சங்கம் மற்றும் பாரதி விதவைகள் நலன்புரிச் சங்கம் என்பவை கூட்டாக இணைந்து செயற்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார். இந்நிகழ்வில் மூதூர் பிரதேச செயலாளர், மதகுருமார்கள், கிராம சேவையாளர், பாரதி பாடசாலையின் அதிபர், பிரதேசக் காவல்துறை மற்றும் இராணுவ அதிகாரிகள், சமுர்த்தி அலுவலர் உட்பட ஏனைய அரச அலுவலர்கள் கலந்து கொள்வர் என அவர் மேலும் இயம்பினார்.

## சீலாமுனை யங்ஸ்ரார் கழகத்தின் வருடாந்த உதைபந்தாட்டப் போட்டிகள்

மட்டக்களப்பு சீலாமுனை யங்ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தக் கால்பந்துச் சுற்றுப் போட்டி 08ம் திகதியிலிருந்து நடைபெற்று வருகின்றது.

அணிக்கு 7 பேர் கொண்ட நொக்கவுட் முறையிலான போட்டியாக நடை பெறும் இப் போட்டிகளில் பெருமளவு கழகங்கள் கலந்து சிறப்பிக்கின்றமை குறிப்பிடத் தக்கது.

இறுதிப்போட்டி ஞாயிறு மாலையில் நடைபெறவுள்ளது.

## திருகோணமலை நகரசபைக் கூட்டத்தில் முன்மொழிவுகள்



எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள திருகோணமலை நகரசபைக் கூட்டத்தில் பின்வரும் பிரேரணைகளை முன்மொழியவுள்ளதாக நகரசபை உறுப்பினர் சி.நந்தகுமார் தெரிவித்தார்.

திருக்கோணேசர் கோயில் அடை வீதியில் உள்ள மத்திய மீன் சந்தைக்கும், சங்கமித்தை யாத்திரிகள் பகுதிக்கு இடைப்பட்ட கடற்கரைப் பிரதேசம் திருகோணமலை நகரில் உள்ள பிரபல்யமிக்க ஆலயங்களான பத்திரகாளி அம்மன் ஆலயம், ஆலடி விநாயகர் ஆலயம், சமாது பிள்ளையார் ஆலயம், ஆதி சிவன் ஆலயம், கிருஷ்ணன் கோயில் ஆலய மூல மூர்த்திகள் விசேட தினங்களின் போதும் ஆலய திருவிழாக்களின் போதும் தீர்த்தமாடும் இடமாக உள்ளதால் இப்பிரதேசத்தை புனித பிரதேசமாக பிரகடனம் செய்தல் மற்றும் நகரசபையின் பணியாற்றும் ஊழியர்கள் அதிகமாக வாழும் காந்திநகரில் உள்ள பாலர் பாடசாலையை எமது நகரசபையின் மாதிரி பாடசாலையாக கொண்டு அபிவிருத்தி செய்வதோடு இப் பாடசாலையை நகரசபையை பொறுப்பேற்று நடாத்துதல் போன்றவற்றை முன்மொழியவுள்ளதாக மலைமுரசிற்கு அவர் தெரிவித்தார்.

## நில ஆக்கிரமிப்பிற்கு எதிராகப் போரிட்ட என்னை நில மோசடி என்று அவதூற்றியுள்ளனர் - மோகன்

தமிழர்களின் காணி ஆக்கிரமிப்பிற்கு எதிராகவும், கலாசாரச் சீரழிவிற்கு எதிராகவும் நான் சில அதிரடி நடவடிக்கைகளை எடுத்தேன். அதனைப் பொறுத்துக் கொள்ளாததுடன் கட்சிக்கு அவதூறு ஏற்படுத்துவதாகவும் கருதியே சிரேட்ட உறுப்பினரான என்னை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியிலிருந்து இடை நிறுத்தியுள்ளனர் என அக்கட்சியின் முக்கியஸ்தர் கணபதிப்பிள்ளை மோகன் இணையத் தளமொன்றிற்குச் செவ்வியுள்ளார்.

காணி பெற்றுத் தருவதாகக் கூறி பொதுமக்களிடம் பல லட்சக்கணக்கான பணத்தை மோசடி செய்ததாக அவர் மீது குற்றஞ்சுமத்தியே கட்சி அவரை விலக்கியுள்ளதாக அறிவித்திருந்தது.

இவ் அவதூறல் தொடர்பாக அவரிடம் வினவிய போதே இவ்வாறு தொழிலதிபர் மோகன் தெரிவித்துள்ளார். எனினும் இடைவிலக்கல் தொடர்பாகத் தற்போது வரை தமக்கு உத்தியோக பூர்வமாக எவ்வித அறிவித்தலும் கிடைக்கவில்லை என அவர் தெரிவித்தார்.

நிலஆக்கிரமிப்புக்கெதிராகவும் கலாசாரச் சீரழிவிற்கு எதிராகவும் தனது அதிரடி நடவடிக்கைகள் தொடரும் எனச் சூளுரைத்த அவர் அப்பணியைச் செவ்வனே இயற்ற கட்சியை விட்டு வெளியேறவும் தான் தயங்கப் போவதில்லை எனத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனையிலிருந்து கிண்ணியாவிற்கு முக்தார்

சர்ச்சைக்குரிய கல்முனை வலய திட்டமிடலுக்கு பொறுப்பான பிரதி கல்வி பணிப்பாளர் ஏ.எல்.எம்.முக்தார் கிண்ணியா கல்வி வலயத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநரின் உத்தரவுக்கு அமைய உடன் அமுலாகும் வகையில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் இந்த இடமாற்றம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

கல்முனை ஸாஹிரா கல்லூரியின் பிரதி அதிபர் ஏ.கபூர் மீது கடந்த ஒக்டோபர் 29ஆம் திகதி தாக்கினார் என இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இந்த நிலையில் பிரதி கல்வி பணிப்பாளர் ஏ.எல்.எம்.முக்தார் இடமாற்றல் உள்ளிட்ட ஏழு அம்சக் கோரிக்கைகள் கல்முனை ஸாஹிரா கல்லூரி நிர்வாகத்தினால் விடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே கிழக்கு மாகாண ஆளுநரின் உத்தரவிற்கு அமையப் பிரதி கல்வி பணிப்பாளர் ஏ.எல்.எம்.முக்தார் கிண்ணியா கல்வி வலயத்திற்கு மாகாண கல்வி அமைச்சினால் இடமாற்றப் பட்டுள்ளார். 03

## "யானைகளுக்கு மின்வேலி பொருத்தமற்றது" - பிரதேசச் செயலர்



பிரதேச குடியிருப்புக்களுக்குள் ஊடுருவியிருக்கும் யானைகளை பிடித்துக் கொண்டுபோய் அவைகள் வாழும் சரணாலயங்களில் விட வேண்டும்

இதனை செய்யாமல் மின்சார வேலி அமைப்பது என்பது பொருத்தமற்றது" என போரதீவுப்பற்று பிரதேச 03

## ஊடகவியலாளர் இரத்தினலிங்கம் வைத்தியசாலையில்

சர்வதேசப் புகழ்பெற்ற திருகோணமலையின் ஊடகவியலாளர் கா.இரத்தினலிங்கம் அவர்கள் உடல்நலக் குறைவினால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

68 வயதான திரு. கா இரத்தினலிங்கம் அவர்கள் உள்ளூர், தேசிய மற்றும் சர்வதேச ஊடகங்கள் பலவற்றின் செய்தியாளராகப பலவருடங்கள் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. கடந்த 7ம்திகதி திருகோணமலைப் பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் அன்றைய தினமே மேலதிகச் சிகிச்சைகளுக்காகக் கண்டி வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு அங்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## விபத்தில் பெண் உயிரிழப்பு



தம்பலகாமத்திலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த முச்சக்கர வண்டியொன்று விபத்த டைந்ததில் பெண்ணொருவர் மரணம் ஆகியுள்ளார். 28 வயதான பாத்திமா ரிஸ்னா என்ற பெண்ணே இவ்வாறு அகால மரணம் அடைந்துள்ளார்.

கடந்த 06ம் திகதி கணவனுடன் முச்சக்கர வண்டியில் 03

## குச்சவெளி மீனவர் சடலமாக மீட்பு

குச்சவெளி பிரதேசத்திலிருந்து நிலாவெளி கடற்பரப்புக்கு மீன் பிடிக்கச் சென்று காணாமற்போயிருந்த மீனவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 31ஆம் திகதி மீன்பிடிக்க இருவர் சென்ற நிலையில் இளைஞன் ஒருவர் காணாமற் போயிருந்தார். 03

## கிண்ணியா மகளிர் வித்தியாலயத்திற்கு அருகில் உல்லாச விடுதிக்கு முதலமைச்சர் தடை



கிண்ணியா முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு அருகில் உல்லாச விடுதி நிர்மாணிப்பதற்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் தடைவிதித்துள்ளார்.

உலக வங்கியின் நிதியுதவியில் புறநெகும திட்டத்தின் ஊடாக கிண்ணியா நகர சபையினால் விருந்தினர் விடுதியொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது. கிண்ணியா டெலிகொமிற்கு அருகிலுள்ள பழைய வைத்தியசாலை காணி என்று அழைக்கப்படும் காணியில் இந்த விருந்தினர் விடுதி அமைக்கப்படவிருந்தது.

இதற்கான அடிக்கல்லைக் கிண்ணியா 03


## ஆசார்யாபிஷேக அழைப்பிதழ்

அன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் வருடம் ஐப்பசித் திங்கள் 28ம் நாள் (14.11.2013) வியாழக்கிழமை உத்தரட்டாதி நட்சத்திரமும் துவாதசித் திதியும் சித்த யோகமும் கூடிய காலை 8.53- 10.29 மணிவரையுள்ள தனு லக்கின சுபமுகூர்த்த வேளையில்

திருவருள் துணைகொண்டு

சிரஞ்சீவி ச. பிரசன்ன ஐயா

அவர்களுக்கு திருகோணமலை கோணேஸ்வராலயத்தில் சிவாச்சாரியாபிஷேகம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து விழாவில் கலந்துகொண்டு பெரியோர்கள் இளங்குருவை ஆசீர்வதித்தும் ஏனையோர் குருவின் ஆசியைப் பெற்றும் இவ்விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

ஆச்சாரியாபிஷேக பிரதமகுரு (தீட்சாகுரு)

ஆகமக் கிரியாஜோதி

சிவஸ்ரீ சதா. மகாலிங்கசிவக்குருக்கள் J.P

பிரதமகுரு. நாயன்மார்கட்டு அரசடிப்பிள்ளையார் ஆலயம்

முதல்வர். சைவக்குருமணிகள் குருகுலம்

வித்தியாகுரு

சிவஸ்ரீ சி. ஆனந்தசிவம் ஐயா B.Com

அதிபர்,விவேகானந்தாக் கல்லூரி உவர்மலை.

பிரதமகுரு. உவர்மலை ஞானவைரவர் ஆலயம்.

நூல் வெளியீட்டு விழா

ஆசார்யாபிஷேக சிறப்பு நிகழ்வாக ஆன்மார்த்த சிவபூஜா பத்ததி என்னும் நூலும் ஆசார்யாபிஷேக சிறப்பு மலரும் வெளியிடப்படும்

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

கோணேஸ்வரர் பரிபாலன சபையினரும், தொண்டர் சபையினரும்.

திரு/திருமதி.சிவஸ்ரீ மு.சண்முகரத்தினக்குருக்கள் அருணாசி தம்பதியினர்


## கறுப்புநிற முழுத் தலைக்கவசத்திற்குத் தடை



உந்துருளியிற் திரிவோர் அணியும் கறுப்பு நிற முழுத் தலைக்கவசத்திற்கு காவல்துறை தடை விதித்துள்ளது.

உடனடியாக அமுலுக்கு வரும்வகையில் இடப்பட்டுள்ள இத்தடையானது நாடு முழுவதிற்கும் செல்லுபடியானது.

முன்னரே இத்தடைக்கான சட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தாலும் தற்போதே அமுலாக்கப்படுகின்றது.





திருகோணமலையில்
ஒரேயொரு மும்மொழிச் சிறுவர் பாடசாலை
(தமிழ் / ஆங்கிலம் / சிங்களம்)
சிறார்களுக்கான அனுமதி ஆரம்பம்
வயது 2 1/2 தொடக்கம்
வேல் சிறார் பள்ளி
Veal Montessori
No. 159A Sea View Road, Trincomalee. T.P 026 2227622
No.27, Lavender Lane, Trincomalee. T.P 026 3204840


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org